# களத்தில்



"அரசியல் விடுதலை என்ற எமது குறிக்கோளுடன் பொருளாதார விடுதலையும் ஒன்றிணைந்து நிற்கின்றது. நாம் நிர்மாணிக்கப் போகும் நாடு, தங்கு நிலையற்றதாக தன்காலில் தரித்து நின்று வளர்ச்சி பெறக்கூடியதாக அமையப்பெறவேண்டும் அதற்கான அத்திவாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும்."

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

(28.01.1999) | தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் | (178) | அன்பளிப்பு : 60 p




தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## 144வது நாளாக தொடரும் உண்ணாவிரதம் மல்லாவியில் சமர் தொடுக்கும் மக்கள்




## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

சிங்கள சிறிலங்கா மீண்டுமோர் ஒரு சுதந்திர தினத்தை 51 வது சுதந்திர தினம் என்ற பெயரில் பெப்ரவரி நாலாம் திகதி கொண்டாடப் போகின்றது.

இலங்கைத் தீவு காலனித்துவத்தில் இருந்து சுதந்திரம் பெறுவதற்கு சிங்களவர்களும் தமிழர்களும் தமது இனங்களின் தனித்துவங்களை விட்டுக் கொடுக்காமல் அதேவேளை இணைந்து போராடினர் என்பது வெளிப்படையான உண்மை. தமிழ் சிங்கள தேச இனங்களை உள்ளடக்கிய பொதுவான தேசியம் ஒன்று இலங்கைத் தீவில் ஒருகாலத்திலும் இருந்ததில்லை என்ற உண்மையை காலனித்துவத்திற்கு எதிரான போராட்டத்தை ஆழமாகப் பார்த்தால் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். அப்படியாயின் ஏன் இவ்விரு தேச இனங்களும் இணைந்து போராடினர் என்பது தான் எண்ணிப் பார்க்கவேண்டிய ஒன்று.

காலனித்துவத்தில் இருந்து விடுதலை பெறுவதன் மூலம் தாம் காலனித்துவத்திடம் தனித்தனியாக இழந்த தமது அரசியல் உரிமைகளை மீளப் பெற்று தமது தாயகத்தில் தாம் பாதுகாப்பான அமைதியுடன் வாழலாம் என்பதற்காகவே அவர்கள் போராடினர். ஒருவரிடம் இருந்து விடுதலை பெற்று இன்னொருவரிடம் அடிமையாவதற்கு யாருமே போராடமாட்டார்கள் என்பது வெள்ளிடை மலை. அதனால் காலனித்துவத்திற்கு எதிரான இந்தப் போராட்டம் நாம் இலங்கையர் என்ற உணர்வை காலனித்துவத்திற்கு எதிராக வளர்க்கும் பொழுது தமிழர்கள் சிங்களவர்கள் என்ற இரு தேச இனங்களாதும் இறைமை அவர்கள் தாயகங்களில் பேணப்பட்ட நிலையில் அதே வேளை இலங்கைத்தீவு முழுவதும் தொழில் செய்து வாழும் சமத்துவம் பேணப்பட்டவர்களாக இரு தேச இனங்களும் திகழவேண்டும் என்ற உணர்வுடனேயே இரு இனங்களாதும் தலைமைகள் வளர்த்துக் கொண்டன. இதனை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் 1927–28ம் ஆண்டின் சமஸ்டிக்கோரிக்கையில் மிகத் தெளிவாக காணலாம். அவர் தமிழர்–கரையோரச் சிங்களவர்கள்– கண்டிச் சிங்களவர்கள் என்பவர்களுக்கான மூன்று தனியான சபைகளை கொண்ட அரசியலமைப்பை கோரினார். இதனை தமிழர்கள் தமது தாயக உரிமைக்காகப் போராடுவதை பிரிவினை என்பவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டிய நேரம் இது. அத்துடன் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ பண்டாரநாயக்கா இலங்கைத் தீவை பல் இனங்களின் தீவாக பார்க்கவில்லை என்ற உண்மையையும் பல்லினத் தேசப் பல்லவி பாடி தீர்வுகளை எய்த விடாது தடுமாற்றங்களை ஏற்படுத்தி அரசியல் இலாபம் பெறத் துடிப்பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் சிங்களத் தேச இனங்களின் தாயக உரிமைகள் ஏற்கப்பட்ட நிலையில் உருவாகும் அரசியல் மாற்றத்தின் பின் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் அவர்கள் தாயகங்களில் வாழும் எல்லா மக்களினதும் அரசியல் உரிமைகளை – மனித உரிமைகளைப் பேணுவதற்கான அரசியல் அமைப்பை உருவாக்கும் பொறுப்பு உண்டு என்பதையே அன்று முதல் இன்று வரை நியாயமான தீர்வாக கருதுகின்றார்கள். எனவே இதனை திரிபுவாதம் செய்து தமிழர்களுடன் எல்லா இனங்களையும் இரண்டாந்தர பிரஜைகளாக நடாத்த துடிக்கும் பௌத்த சிங்கள பேரினவாதத்தின் பல்லின கோஷத்தினை சம்பந்தப்பட்ட எல்லா இனங்களும் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டிய நேரம் இது. உண்மையான மனித விடுதலைக்காகப் போராடும் யாருமே மற்றொரு மனிதனை அடிமை கொள்ள நினைத்துக் கூடப் பார்க்கமாட்டார்கள் என்பதை இலங்கைத் தீவின் மக்கள் அனைவரும் மனதிருத்த வேண்டிய நேரம் இது.

ஆனால் நடந்தது என்ன? பிரித்தானிய காலனித்துவம் மிகக் கெட்டித்தனமாக செயற்பட்டது. தேச இனங்களின் அமைதியை ஒன்றிப்பை ஒருங்கிணைந்த காலனித்துவ எதிர்ப்பை தடுமாற வைக்க கூடிய வகையில் 1930ம் ஆண்டில் டொனமூர் அரசியலமைப்பின் மூலம் சனத்தொகை ரீதியான சர்வசன வாக்குரிமையை ஏற்படுத்தி பெரும்பான்மை சிறுபான்மை என்ற மாயையை இலங்கைத்தீவில் உருவாக்கினர். காந்தியின் யாழ்ப்பாண விஜயத்தின் பின் இந்திய மக்களாதும் இலங்கை மக்களாதும் காலனித்துவத்திற்கு எதிரான செயற்பாடுகளை முறியடிப்பதற்கான உத்திகளுக்கு காலனித்துவம் முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியமை மற்றொரு வரலாற்று போக்கு. இவைகளின் விளைவாக பெரும்பான்மையினர் என்ற மகுடத்தை காலனித்துவத்திடம் இருந்து சிங்கள இனம் பெற்றுக் கொண்டதும் பௌத்த சிங்கள பேரினவாதம் வீறு கொண்டெழுந்தது. இதனை அரசியல் இலக்காக மாற்றும் வலிமையை தேர்தல் முறைமை பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு அன்று முதல் இன்று வரை கொடுத்து வருகின்றது. இதனால் 1930 முதல் இன்று வரை உருவான எல்லாச் சிங்களத் தலைமைகளும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தையே தமது தலையான அரசியல் பண்பாக வெளிப்படுத்தினாலே அவர்களால் பதவிகளைத் தக்க வைத்துக் கொள்ளும் யதார்த்தம் காணப்படுகிறது.

இதனால் பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுதலை பெற்ற தமிழர்கள் பௌத்த சிங்கள நவகாலனித்துவ ஆட்சி ஒன்றை 24 ஆண்டுகள் அனுபவித்தனர். அதனை அவர்கள் ஜனநாயக வழிகளில் எதிர்க்க முயன்ற பொழுது நவகாலனித்துவம் தன்னை சிறிலங்கா என்னும் அந்நிய அரசாக 1972ல் மாற்றிக் கொண்டது. இதனை எதிர்த்து தமிழர்கள் ஜனநாயக வழிகளைக் கையாண்ட பொழுது தமிழ் மக்களை ஆயுத ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கி அவர்களின் அரசியல் பணிவைப் பெறுவதற்கான சர்வாதிகாரம் தலைதூக்கியது.

# மீளட்டும் நம் சுதந்திரம்

1972ல் பௌத்த சிங்கள குடியரசை தமிழர்கள் ஏற்கவில்லை என்பதை உலகுக்கு அறிவிப்பதற்கான அடையாள வாக்களிப்பாக (Plebiscite) காங்கேசன்துறைத் தொகுதி பாராளுமன்ற ஆசனத்தை தந்தை செல்வநாயகம் இராஜினாமாச் செய்தார். ஆனால் 1975 வரை இத்தேர்தல் சிறிலங்காவால் நடாத்தப்படவில்லை. 1972க்கும் 1975 க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் எவ்வித ஆயுத எதிர்ப்பும் தமிழ் மக்களால் காட்டப்படாத காலகட்டத்தில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். தடுப்புக்காவல்களில் வதைக்கப்பட்டனர். கொன்று வீசப்பட்டனர். இவ் அநுபவங்களின் அடிப்படையிலும் காங்கேசன்துறைத் தொகுதியில் மக்கள் அளித்த அறுதிப் பெரும்பான்மை [illegible] அடிப்படையிலும் 1975ல் தந்தை செல்வநாயகம் சிறிலங்கா பாராளுமன்றத்தை விட்டு தமிழர்கள் விலகி தங்கள் சுயநிர்ணய உரிமையை பிரயோகிக்கப் போவதாக சிறிலங்காப் பாராளுமன்றத்தில் அறிவித்தார். 1976ல் அச் சுயநிர்ணய உரிமைப்பிரயோகம் தமிழர்கள் தாங்கள் காலனித்துவத்திடம் இழந்த பாரம்பரிய வரலாற்றுத் தாயகமான தமிழீழத்தை மீள அமைத்தல் எனவும் உலகிற்கும் சிங்கள மக்களுக்கும் தெளிவாக அறிவித்தார். தமிழ் மக்கள் 1977 பொதுத்தேர்தலை குடியொப்பமாக மாற்றி தமிழீழத்தை அங்கீகரித்ததின் மூலம் தம்மை தமிழீழ மக்களாக மாற்றிக் கொண்டனர். தமிழீழத்தை ஜனநாயக வழிகளில் அடையமுடியாது போனால் போராட்டத்தின் மூலம் எய்த வேண்டும் எனவும் தமிழ் மக்கள் 1977 தேர்தல் மூலம் ஆணையிட்டனர்.

தமிழீழ மக்களின் குடியொப்ப ஆணையை ஜனநாயக வழிகளில் ஏற்க மறுத்த சிறிலங்கா இனஅழிப்பின் மூலம் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை தடுக்க முயன்றனர். இது தமிழ் மக்களை தமக்காகவும் தம் தேசத்திற்காகவும் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலையை தோற்றுவித்தது. இந்த புதிய அரசியல் மாற்றத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அன்று முதல் இன்று வரை 22 ஆண்டுகள் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கின்றனர்.

ஆயினும் சிறிலங்காவும் கடந்த 22 ஆண்டுகளாக தமிழீழ மக்கள் மீதான யுத்தத்தையும் தமிழீழத் தேசம் மீதான ஆக்கிரமிப்பையும் பல்வேறு விதமான இனஅழிப்புக்கள் உட்கட்டுமான அழிப்புக்கள் மூலம் தொடர்ந்து வருகின்றனர். பேச்சுவார்த்தைகள் கூட சிறிலங்கா யுத்தத்திற்கான தயாரிப்புக் காலமாக மாற்றிய மூன்று அனுபவங்களைத் தமிழீழ மக்கள் சந்தித்து உள்ளனர். ஒவ்வொரு பேச்சுவார்த்தையின் பின்னும் சிறிலங்காவின் ஆக்கிரமிப்பு விஸ்தரிக்கப்பட்டமைய வரலாறாக உள்ளது. இது சிறிலங்கா பேச்சுவார்த்தையை இராணுவ தந்திரோபாயமாக பயன்படுத்துவதற்கு தெளிவான சான்றாக உள்ளது. ஆயினும் ஒவ்வொரு ஆக்கிரமிப்பினையும் காலத்துக்கு காலம் வலிமையுடன் எதிர்த்து தமிழீழத் தேசியப் போராட்டத்தை இலக்கை அடையும் வரை வெற்றிகரமாக நடாத்தும் வலிமை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு என்றும் உண்டு என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் தெளிவாக நிரூபித்து வருகின்றனர்.

இதனால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் புலம்பெயர் தமிழீழ மக்களுக்கும் அவப்பெயர்களை உண்டாக்கி தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் சர்வதேச அங்கீகாரத்தை தடுப்பதன் மூலம் கால இழுத்தடிப்புக்களை உருவாக்கித் தனது இராணுவ நடவடிக்கைகளுக்குச் சாதகமான சூழலை உண்டாக்கப் பெரும் பணச் செலவுடன் சிறிலங்கா திட்டங்களைத் தீட்டி வருகிறது. ஆயினும் புலம்பெயர் தமிழர்களின் முயற்சிகளினால் சிறிலங்காவால் இவ்விலக்கையும் அடையமுடியாது தவிக்கின்றது. ஆயினும் முல்லைத்தீவு முதல் கிளிநொச்சி வரை தமிழீழ விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டு தென்தமிழீழத்திலும் கிராமங்கள் பல முற்றாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் வந்துள்ளது. யாழ்ப்பாணத்தை கைப்பற்றி விட்டோம் விடுதலைப் புலிகளைக் காட்டுக்குள் அனுப்பி விட்டோம் எனக் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கொக்கரித்த சந்திரிகாவும் ரத்வத்தையும் தமது இராணுவத்தினால் வழங்கல்களைக் கூட செய்ய முடியாதவர்களாக உள்ளனர் என்ற உண்மையை நுயசிக்குளம் இனை பற்றேஸ்வி அடைய வைத்ததின் மூலம் விடுதலைப் புலிகள் உலகிற்கு நிரூபித்து நிற்கின்றனர். தமிழீழத் தரையை நிலையான ஆக்கிரமிப்பு செய்ய முடியாது என்பதற்கு கடும் இராணுவ பாதுகாப்புக்களுக்கு மத்தியிலும் அனுதினம் உயிர்களைப் பலி கொடுக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டு சிறிலங்காப் படைகள் சான்றுகளாக உள்ளனர். தமிழீழக் கடலை நிலையான ஆக்கிரமிப்பு செய்வது என்பது எண்ணிப் பார்க்கவே முடியாத ஒன்றாகிவிட்டதை சிறிலங்காப் படைகள் நன்கு உணர்ந்து விட்டன. இனி தமிழீழ வானிலும் நிலையான ஆக்கிரமிப்பு என்பது நடக்க முடியாத ஒன்றாகி வருகிறது என்பதை 98 மாவீரர் நாள் அன்று வானிலிருந்து கொட்டப்பட்ட மலர்களின் மணம் சிங்களப் படைகளுக்கு உணர்த்திய நிலையில் 1999ம் ஆண்டு ஆரம்பமாகியுள்ளது.

ஆனாலும் ஏற்பட்டுவிட்ட அரசியல் யதார்த்த மாற்றங்களைப் புரிந்து அதற்கேற்ப நடந்து இலங்கைத்தீவின் அமைதியைப் பேணுவேன் என தேர்தல் வாக்குறுதிகள் அளித்து ஆட்சியைப் பிடித்த சந்திரிகா தான் கூறிய சமாதானத்தையும் உருவாக்கவில்லை–தான் கூறிய ஜனநாயக ஆட்சி ஒழுங்கையும் நடைமுறைப்படுத்தவில்லை. மாறாக தமிழ் மக்கள் மீதான மிக மிக கொடுமையான யுத்தத்தை எந்த எந்த வழிகளில் எல்லாம் முடுக்கி விட்டு சிங்களப் பேரினவாதத்தின் தலைமையாகத் தன்னை அத்தாட்சிப்படுத்தி தற்பொழுது மாகாண சபைத் தேர்தலில் பௌத்த சிங்கள பேரினவாத வாக்குப்பிச்சை வேட்டையில் மகிழ்ந்து கொண்டிருக்கின்றார்.

இது சுதந்திரம் அடைந்த காலம் முதல் தமிழர்களை அழித்தல் என்ற சிங்கள பௌத்த பேரினவாதமே சிங்களத் தேர்தல் களத்தின் மந்திரமாக மிளிர்கிறது என்பதை நன்கு தெளிவாக்கியுள்ளது. இந்நிலையில் தமிழர்களது சுயநிர்ணய உரிமையை ஏற்று அவர்களது சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச மட்டத்தில் தமிழீழ மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்து ஏற்ற நிலைப்பெற சர்வதேச அமைப்புக்கள் ஆவன செய்யாவிடில் தமிழர்கள் காலனித்துவத்திற்கு எதிராக தொடங்கிய தேசிய விடுதலைப் போராட்டம் அவர்கள் போராடத் தொடங்கிய நோக்கினை பெற்றுக் கொடுத்து பாதுகாப்பான அமைதியை அவர்கள் அடைய உதவும். எனவே தமிழர் பிரச்சினையை சிறிலங்காவின் உள்நாட்டுப்பிரச்சினையாக–சிறுபான்மை பெரும்பான்மை பிரச்சினையாக– பல்லின சமூக பிரச்சினையாக– எல்லாம் பார்க்கும் அவல நிலைகள் முற்றுப் பெற்று அதனை தமிழீழத் தேசிய இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டமாக உலகு பார்க்கும் நிலையை புலம் பெயர் தமிழர்களாகிய நாம் உருவாக்குவோம். மீட்டும் நம் சுதந்திரம். 2000ம் ஆண்டின் தொடக்கத்தில் தமிழீழ மக்களும் சுதந்திர தினம் கொண்டாடும் பொற்காலம் உருவாகட்டும்.

***


| AUSTRALIA | CANADA | DENMARK | FRANCE | GERMANY | ITALY |
|---|---|---|---|---|---|
| TCC P O Box 375, Preston, Victoria 3072 | WTM 64 Eaton Avenue, Toronto, Ontario M4J 2Z5 | LTTE P.O.Box 47, 7400 Herning | TCC 341 Rue Des Pyrenees, 75020 Paris | TCG Postfach 340251, 51624 Gummersbach | TCC Via Mariano Stabile - 49, 90139 Palermo |
| **NETHERLANDS** | **NORWAY** | **SWITZERLAND** | **SWEDEN** | **UNITED KINGDOM** | **U.S.A** |
| TCC 's-Grd. Hertoginnelaan-106, 2517 EL Den Hagg | TCC P.O.BOX 1699 Vika, 0110 Oslo | WTTC Joses Str - 110, 8005 Zurich | TCC Glomminge Grand-25, 3rd Floor, 16362 Spanga | UTO Eelam House, 202 Long Lane, London SE1 4QB | W.T.C.C 170-10 Cedarcroft Road Suite 1-L, Jamaica New York 11432 |



# உள்ளே கொதிப்பாறுமா ஒரு மனச் சாட்சியின் குரல்

**க.வ. துரைரத்தினம்**

தேசாந்தரம் புறப்பட்ட ஒரு தெருப்பாடகனைப்போல.... பட்டமரத்திற் குடியிருக்கும் பறவைகளைப்போல.... உழுத வயலில் வளை தோண்டும் அகிழானைப்போல.... குடா நாட்டில் இன்று நாம் குடியிருக்கின்றோம்.

சின்னத் துவாரத்தினூடே தெரிந்த ஒளிக்கீற்றைச் 'சூரியப்பிரகாசம்' என நம்பி வேடன் விரித்த வலையில் விழுந்து விட்டோம் என்ற 'ஞானம்' இன்றுதான் எமக்கு விளங்கியது. எம்மை விடுவிக்க வந்ததாகக் கூறிய சிங்களப் படைகளைத் தேவதூதராக எம்மிற் சிலர் நம்பினர். அவர்கள் முகத்திலணிந்திருந்த முகமூடியை உண்மை முகமென எண்ணி ஊர் திரும்பினோம். அன்று பட்டுச்சேலையின் சரிகை கரைந்ததும் கட்டிய சேலை பழையது தான் என்பதைக் கண்டுகொண்டோம்.

குடாநாட்டுக்குத் திரைபோட்டு உள்ளே நடப்பது வெளியே தெரியாதவாறு மறைத்து விட்டு, சிறிலங்காவின் பிரச்சார ஊடகங்களெல்லாம் புனரமைப்புப்பற்றியே பேசுகின்றன. சிந்திய கண்ணீருக்கு மாற்றீடாக யாழ்ப்பாண மக்களுக்கு சுதந்திர வாழ்வளித்துள்ளோமென்று எழுதுகின்றன. பன்னிரெண்டு வருடப் பயங்கரவாத ஆட்சியிலிருந்து மக்களை மீட்டெடுத்து மீளிரச் செய்ததாகக் காட்டுகின்றன.

எங்கள் நெஞ்சை நாங்களே தொட்டு மனச்சாட்சிக்கு ஒரு பதில் கூறவேண்டிய தருணமிது தான். வெள்ளைக்கொடி கட்டிய வீட்டிலிருக்கவும்... இரவாகி ஊரடங்கு நேரத்தில் வெளியே போவதெனில் இரண்டு விளக்குகளுடன் செல்லவும்... பத்து மைல் தூரத்திற்கு பஸ்ஸில் போதற்கிடையில் பன்னிரெண்டு இடங்களில் பரிசோதனை என்று இறங்கி ஏறவும்... வந்து நிற்கும் சிங்களப் படையினர் எங்கள் பெண்களின் மேனியை காமக் கண் கொண்டு மேயவும், சிலநேரங்களில் தொடவும், கண்டும் காணாதது போல சகித்துக் கொள்ளவும்... தினசரி கற்றிவளைப்பென்று அவலத்துக்குள்ளாகவும்... எல்லாவற்றுக்கும் மேலாக எங்களை நாங்களே தீர்மானிக்க முடியாத, இருப்பிழந்து போன மனிதக்கூடு என உலாவவுமா நாங்கள் குடாநாடு திரும்பினோம்?

பன்னிரெண்டு வருடப் பயங்கரவாதிகளின் ஆட்சி என்று சந்திரிகா அரசினால் வர்ணிக்கப்படும், எம் பிள்ளைகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் குடாநாட்டில் எப்போதாவது இப்படி நடந்ததா? அப்போது எப்படி இருந்தது? நள்ளிரவில் கூட எங்கள் பெண்பிள்ளைகள் நடுக்கம் இன்றி அந்தநாட்களில் உலவினர். பாட்டும், கூத்தும், பண்பாட்டு எழுச்சியுமாக எழில் கொண்டு விளங்கியது யாழ்குடாநாடு.

கசிப்பு இருந்ததா? காடையரின் தான்தோன்றித் தனங்கள் தலைவிரித்தாடியதா? ஆபாசசினிமாவும், இழிவுக்கலாச்சார எச்சங்களும் போதைமருந்துப் பொருட்களும் இருந்தனவா? தெருவில் போய்வரும் போது அடையாள அட்டை காட்ட வேண்டிய அவலம் ஏதும் இருந்ததா? நிம்மதியாக நாங்களும், விடுதலை நெருப்புடன் புலிகளும், தாய் பிள்ளை உறவோடு மகிழ்ந்திருந்தோம். இந்த மகிழ்ச்சியான காலத்தைதான் சந்திரிகா அரசு பயங்கரவாதிகளின் ஆட்சிக்காலம் என்று கூறுகின்றது.

இந்தப் பன்னிரெண்டு வருட காலத்தில் சிறிலங்கா அரசும், சிங்களப் படைகளும் எம் மீது கீறிய கோரங்கள் எத்தனை? இன்று புனரமைப்பு என்று புலம்பும் சிங்கள அரசு எம்மீது செய்த கொடூரங்கள் எத்தனை? கொலைகள் எத்தனை? இன்று கட்டி எழுப்புவோம் என்று சொல்லும் கட்டடங்களையெல்லாம் குண்டு வீசி இடித்துக் கொட்டியது யார்? குடாநாட்டு வீதிகளை தார் பூசி சீர்செய்வதாக கூறுகின்றனர். இந்த வீதிகள் குண்டும் குழியுமானது யாரால்? நவாலியிலும், நாகர் கோவிலிலும் மனிதப் படுகொலைக்கு உத்தரவிட்டது யார்? இராஜவீதியில் பள்ளிக்குப் போன பிள்ளைகளைக் குண்டு வீசி அழிக்கத் தேதிகுறித்தது யார்?

இந்துக் கோவில்களையும், கிறிஸ்தவ தேவாலயங்களையும் எரிகணைவீச்சுக்கும், குண்டுவீச்சு விமானங்களுக்கும் இரையாக்கியவர் எவர்? விடுதலைக்காக எழுந்து பறக்கத் தொடங்கிய போதே எமது இறக்கைகள் முறிக்கப்பட்டன. சுதந்திர விடியலைக் காணும் ஆவலால் நாங்கள் கூவத்தொடங்கியபோதே எமது குரல்வளைகள் திருகப்பட்டன. ஆடிப் பாடித் திரிந்த எம்வீதிகள் ஆதிக்க சக்திகளின் சப்பாத்துக் கால்களினால் ஆக்கிரமிக்கப் பட்டன. நாங்கள் மூச்சு விடவும், விலங்குடன் உலாவவுமே நேரமொதுக்கித் தந்துள்ளான் எதிரி.

இன்னநேரத்திற்கு வெளியே வரவென்றும், இன்னநேரத்திற்குள்ளே உள்ளே போவென்றும் எங்களுக்கான இருப்புக்கு வந்த ஒருவன் வரம்புகட்டி வைத்துள்ளான். இந்த எல்லைகளுக்குள்ளே நீளக்கயிற்றிற் கட்டி மேயவிடும் மாடுகளைப் போல வாழ்வதெம் விதியாச்சு. அவலவாழ்வுள்ளே நாங்கள் அந்தரிப்புக்குள்ளாகியுள்ளோம்.

நாங்கள் அவாவிய விடுதலையை அடித்து நொருக்கி விட்டு, நாங்கள் ஆசைப்பட்ட சுதந்திரத்தை நசுக்கிக் கசக்கிவிட்டு, வீட்டுக்கு மின்சாரம் தருகின்றனர். வாயைத்திறந்து பேசவும், பாடவும், கூடிக்கூத்தாடவும் எமக்கிருந்த, விட்டு விடுதலையான வாழ்வைப் பறித்து விட்டு, தொலைபேசி தருகின்றனர். பெற்றோலுக்கும், மண்ணெண்ணெய்க்காகவுமே நாங்கள் போராடியதாக தப்புக்கணக்கிட்டு கப்பலில் வந்திறங்கும் பொருட்களுக்கு [illegible] செய்கின்றனர்.

நாங்கள் கேட்டது இவையல்ல.

நாங்கள் கேட்பதும் இவையல்ல.

நாங்கள், எம்மை எவருமே ஆளாத வாழ்வையே கேட்கின்றோம். நாங்கள், எம்மை நாமே தீர்மானிக்கும் இருப்பையே கேட்கின்றோம். நாங்கள் பாருக்கும் அடிமைகள் அல்லர்.

எங்கள் வீதிகளில் 'செல்றி'கள் அமைத்து எங்கே போகின்றாய் என்று எம்மை இடைமறித்துக் கேட்காத வாழ்வுக்கே ஏங்குகின்றோம். அந்த வாழ்வை வழங்கப் போவதாக தென்பகுதி சிறீல் எமக்கு உத்தரவாதம் கொடுத்தவர்கள் இன்று எதை வழங்குகின்றனர்?

அழகான தேர்தல் நடைமுறை அரசு அரங்கேற்றிவிட்டு, கோமாளிகளை ஆடவிட்டுள்ளனர். இந்தக் கொழும்புப் பிரமுகர்களுக்காகவா நாங்கள் தவமிருந்தோம்? பத்து வருடங்கள் எம்மைப் பார்க்காதிருந்த இந்த முகமில்லா மனிதர்களுக்காகவா நாங்கள் குடாநாடு புகுந்தோம்? வேடமிட்டாலும் இந்த அரசியல் விபச்சாரிகள் எம்மையும் சோரம் போகலாம் யாருக்கும் என்று தூண்டுகின்றனர். பேரினவாதப் பிசாசுகளுடன் இரவிற் கூத்தாடும் இந்த துரோகக் கூட்டம் பகலில் வந்து எங்களுக்கு கண்ணீர் துடைப்பதாக கணக்கு விடுகின்றனர். எமக்கு எல்லாம் விளங்கும்.

நீதியின் தராசில் நிறுவையிட்டு இருபக்கத்தையும் அளவிட்டறியும் வேளை வந்துள்ளது. மாரீசமானின் பொய்மைத் தோற்றத்தில் மயங்கியது போதும். அடங்கி வாழ்ந்தால் அனைத்தும் கிடைக்கும் இல்லையேல் ஒன்றும் கிடைக்காது உருக்குலைந்து போவீர் என்ற சிங்கள அரசின் மிரட்டலுக்கு சிரம் தாழ்த்தியது போதும். சுதந்திரத்தின் பெருமதி யாது, விடுதலையின் பெருமையறியாது எம் பிள்ளைகளால் உயிர் கொடுத்து பெற்ற விடுதலைச்சுடரை அணைத்தவர் என்ற பழிச்சொல்லுக்கு நாம் ஆளாகக் கூடாது. கண்ணீர் விட்டு வளர்த்த விடுதலைப் பயிரை கருகச்செய்தவரென்ற அவப்பெயரை எதிர்காலச்சந்ததி எம்மீது சுமத்தக் கூடாது.

குடாநாட்டுக்கு உள்ளேயிருப்பதா? வெளியேயிருப்பதா? என்பது விவாதத்துக்குரியதல்ல. எங்கிருந்தாலும் விடுதலை உணர்வுடனும், சுதந்திரத்தைப் பெறும் துணிவுடனும் வாழ்ந்தோமா என்பதே கணிப்புக்குரியது. காலம் கழியக் கழிய இன்னும் நெருக்கடிகளையும் இராணுவ அழுத்தங்களையும் சந்திக்கப் போகும் குடாநாட்டில் வாழும் நாங்கள், இதற்கு எப்படி முகம் கொடுக்கப் போகின்றோம் என்பதே கேள்வி. உலகமெங்கும் அடக்குமுறையாளர் போரிடும் மக்களுக்கு கொடுத்த மரண மிரட்டல்களுக்கும், வதையின் கோரங்களுக்கும் பணிந்து சிங்கள அரசுக்கு சிரந்தாழ்த்தப் போகின்றோமா? அல்லது நெஞ்சில் விடுதலை நெருப்புடன் தொடர்ந்தும் நிமிர்ந்து நின்று வேதனைகளையும் சோதனைகளையும் சந்தித்து வெற்றி கொள்ளப் போகின்றோமா?

[illegible] பயிரை கருக விடுவோமாயின், அடக்குமுறையாளருக்கு நாங்கள் நல்ல மனிதர்கள். ஏதோ ஒரு வழியில் எங்கள் [illegible] போரிடும் பிள்ளைகளுக்கு சோறாவது கொடுத்தால், சுதந்திரதேவிக்கு நாங்கள் சொந்த மனிதர்கள். இந்த இரண்டு பக்கத்திலும் எந்தப் பக்கத்தில் நாம் எம்மை இனம் காட்டப் போகின்றோம்?

சத்தியம் தோற்றதாகச் சரித்திரமில்லை. நாங்கள் முன்னெடுத்துள்ள விடுதலைப்போர் நமக்காக அல்ல, நம் சந்ததிக்காக என்று உணர்ந்து கொள்வோம். பாதிவழி கடந்த விடுதலைப் பயணத்தைத் தொடர்வோம். எந்தத்துயர்வரினும் ஏற்றுக் கொள்வோம்.

தொடர்ந்து நடப்போம்,

விடுதலை கிட்டும் வரை...



# அனைத்துலக தமிழர்களின் [illegible]கள்

## சுவிஸ்



[illegible]

## ஜேர்மனி

[illegible]

## பிரித்தானியா



[illegible]

## இத்தாலி

[illegible]

## அவுஸ்திரேலியா


[illegible]

[illegible]

## [illegible] நினைவுகள்

[illegible]


# போரும் பொருண்மியமும்




தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்ததிலிருந்து தமிழீழத்தின் மீது பொருளாதாரத்தடைகளை சிங்கள அரசு அமுல்படுத்தியது. அடிப்படைத் தேவைகளான உணவு மருந்து மீதும், உற்பத்திக்குத் தேவையான எரிபொருள், உரம் போன்ற பொருட்கள் மீதும் தடைகளை விதித்தது. விடுதலைக்குப் போராடும் மக்களுக்கு இதை ஒரு நெருக்கடியாக, அவர்களை அழிக்கும் ஓர் ஆயுதமாக சிங்கள அரசு கையாண்டது. உடனடி நெருக்கடியைத் தகர்ப்பதும், தேச நிர்மாணத்துக்கான வலுவான தன்நிறைவுள்ள பொருளாதாரத்தையும், உற்பத்தி அதிகரிப்பையும் மேற்கொள்வதுமாக இரு இலக்குகளுடன் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செயற்பட்டது.

இயற்கை மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிக்கும் வழிமுறைகளைக் கையாளவும், அவை பற்றி ஆய்வு செய்யவும் பல செயற்திட்டங்களைத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆரம்பித்தது. இயற்கையிலிருந்து ஏற்படக் கூடிய அழிவுகளையும், இயற்கை அழிந்து போவதையும் தடுக்கக் கூடிய வகையில் இச்செயற்திட்டங்



கள் அமைந்துள்ளன.

மேலை நாடுகளில் வாழ்கின்ற நாம், இந்நாடுகளில் மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களும், இதர பொருட்களும் வேண்டிய அளவு உற்பத்தி செய்யப்படுவதுடன், மேலதிகமானவை ஏற்றுமதிக்குப் பாவிக்கப்படுவதையும் காண்கின்றோம். இவை நீண்டகால திட்டமிட்ட உற்பத்தி பொருளாதார முறைகளின் விளைவுகள். போதிய முதலீடுகளுடனும், அரச, தனியார் ஆதரவுடனும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழீழத்திலும் இத்தன் நிறைவு நிலையை உருவாக்க நிதி முதலீடுகளைச் செய்வதில் புலம் பெயர்ந்து வாழும் மக்கள் முன்வர வேண்டும். தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், செயற்படுத்தி வரும் வேலைத்திட்டங்களால் மக்களின் உணவுத்தேவையை, குறிப்பாகப் போசாக்கின்மையைப் போக்க, தாவர, மிருக புரதங்களை மக்களுக்கு வழங்கும் செயற்திட்டங்களிற்கு நிதியுதவி வழங்குமாறு புலம்பெயர் தமிழ் மக்களிடம் இந்நிறுவனம் வேண்டியுள்ளது.

அவ்வாறான செயற்திட்டங்கள், ஆடு, மாடு, பன்றி, கோழி வளர்த்தல் போன்றவை தனியார் அளவிலும், சிறுபண்ணைகளாகவும் நடைமுறையில் உள்ளன. இவற்றின் மூலம் பல குடும்பங்கள், ஆண் உழைப்பாளிகளை போரில் இழந்த குடும்பங்கள் தம் வாழ்விற்குத் தேவையான பொருளாதாரத்தைப் பெறுவதுடன், வேறு தொழில்களையும் தோற்றுவிக்கின்றன.

உங்கள் தொடர்புகட்கு:
**தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**
Wep Page:- web.ukonline.co.uk/members/teedor
e-mail:- eelamhouse.teedor@ukonline.co.uk

10.01.1999 டென்மார்க் பொலிற்றிக்கன் [POLITIKEN] செய்தித் தாள் கட்டுரையின் தமிழாக்கம்



# தகரக்குடில்களில் ஆற்றாமையின் விளிம்பில் வசிப்போர்





சிறீலங்காவின் உள்நாட்டு யுத்தம் காரணமாக 500,000 குடும்பங்கள் அகதிகளாகி உள்ளனர். மிகக் குறைவான பங்கீட்டு உணவுடனும் நம்பிக்கையிழந்த நிலையிலும் பல ஆண்டுகளாக தகரக் குடில்களில் வாழ்கின்றனர். சமாதானம் ஒன்று மட்டுமே இவர்களை, அவர்களுடைய அழிக்கப்பட்ட கிராமங்களுக்கும் கைவிடப்பட்ட வயல்களுக்கும் கொண்டு சேர்க்கக் கூடியது.

*– கொழும்பிலிருந்து நீஸ் ஒல்ஸன்.*

கணேசன் யோகராணி என்பவர் அவரது கிராமம் சிறீலங்கா இராணுவத்தினரால் தரைமட்டமாக்கப்பட்ட காலத்திலிருந்து கடந்த எட்டு வருடங்களாக அகதியாக இருக்கின்றார். சிறீலங்காவின் கிழக்கு கரையோரத்திலுள்ள திருகோணமலையில் இருக்கும் அகதி முகாமில் தகரக்குடிலில் இவர் தன் கணவனுடனும், 8வயதிலிருந்து 14வயதுள்ள நான்கு பிள்ளைகளுடனும் வசிக்கின்றார். இப்பிள்ளைகளில் மூவர் இவருடைய சகோதரியின் குழந்தைகளாவர். உள்நாட்டு யுத்தத்தின் அமளியில் இச்சகோதரி காணாமற் போய்விட்டார். கணவரை இராணுவம் பிடித்துச் சென்றுவிட்டது. யோகராணியின் அயற்குடிலில் வசிப்பவர் அந்தோனியம்மா என்பவராகும். 1990 இல் இராணுவத்துக்கும் தமிழ் புலிகளுக்கும் இடையே நிகழ்ந்த போரில் இவருடைய வீடு அழிக்கப்பட்டதால் இவர் வீடற்றவரானார். இவர் தனது நான்கு பிள்ளைகளுடன் இந்தியாவிலுள்ள ஒரு அகதிமுகாமுக்குச் சென்று, பின்னர் 1994 இல் வீடு செல்லலாம் என்ற நம்பிக்கையுடன் சிறீலங்காவுக்குத் திரும்பியிருந்தார். இப்போது திருகோணமலையிலுள்ள அகதிமுகாமே நான்குவருடங்களாக இவரது வீடாக இருக்கின்றது. இவரது கணவன் இறந்துவிட்டார். மகன் முகாமிலேயே திருமணமாகி இரு பிள்ளைகளுக்குத் தந்தையாக உள்ளார். இவரது மகள் இன்னுமொரு முகாமில் தனது கணவனுடன் வசித்துவருகிறார்.

ஒவ்வொரு தகரக்குடிலும் ஒரு சோகக் கதையைத்தான் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கின்றது. இக்குடில்களில் 500க்கும் அதிகமான தமிழ்க்குடும்பங்கள் தங்களது கிராமங்களுக்குச் செல்வதற்காக இங்கு காத்திருக்கின்றனர். இக் கிராமங்களிலுள்ள வீடுகள் இப்போ அழிந்து கிடக்கின்றன. வயல்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. இக்கிராமங்கள் 40 கிலோ மீற்றர் தொலைவில் மட்டுமே இருப்பினும், அவை தமிழ்ப் புலிகளின் புரட்சி இயக்கமாகிய எல்ரிரிஈயின் கட்டுப்பாட்டில் இருப்பதனால், அரசாங்க இராணுவம் இவர்களை அங்கே செல்ல அனுமதிக்க மறுக்கின்றது.

அகதிமுகாம்கள் என அழைக்கப்படும் இந்த இடங்கள், புழுதி மண்டிய ஒழுங்கைகளில் ஒன்றோடொன்று நெருக்கமாக ஒண்டியிருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வெறும் தகரக் குடில்களே. இவற்றில் வாழும் குடும்பங்களின் சொத்துக்கள், அத்தியாவசியமான சில உடைகள், நீருக்கான ஒரு குடம், அடுப்பிலே வைத்துச் சமைப்பதற்கு ஒருபாத்திரம் என்பவற்றுடன் சிலசமயங்களில் சாக்குக்கட்டிலுமே. இங்கு மிக குறைந்த அளவு உணவே பங்கீட்டு உணவாக வழங்கப்படுகின்றது. இங்கு இந்த அளவாவது உணவு கிடைக்கின்றது. ஆனால் இதற்கு நேர்மாறாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள அகதி முகாமகளில் உள்ள அகதிகளுக்கோ, அரச பங்கீட்டு உணவை மிகவும் குறைவாகவே கொடுக்கின்றது. இங்கு வேலை வாய்ப்பில்லை. முகாமகளிலும் செய்வதற்கு ஒன்றும் இல்லை. பிள்ளைகள் வெளிநாட்டவரை விநோதமாக உற்றுநோக்குகின்றனர். ஆனால் அவர்கள் சிரிப்பதோ மிக அரிதாக உள்ளது.



## டென்மார்க் கோட்டை

திருகோணமலை உள்நாட்டு யுத்தத்தில் ஒரு கேந்திர தானத்தை வகிக்கின்றது. இந்த நகரத்திலதான் உலகத்திலேயே பெரிய இயற்கைத் துறைமுகம் உள்ளது. 1620 இல் டெனிஷ் அட்மிரலான ஒவ கிஜெதெ, 4வது கிறிஸ்ரியன் பெயரில் இந்த நகரில் முதலாவதாக ஒரு கோட்டையைக் கட்டிய காலத்திலிருந்து இந்த நகரம் படைப்பிரிவையும் கடற்படைப்பிரிவையும் கொண்டதாக உள்ளது.

இன்று இந்நகரில் சிறீலங்காவின் இராணுவம், கடற்படை, விமானப்படை மூன்றுமே உண்டு. திருகோணமலையைச் சுற்றியுள்ள நான்கு பிரதேசங்கள் தமிழ்ப் புலிகளின்வசம் இருப்பதனால் இங்கு அவர்களது கெரில்லா நடவடிக்கைகள் அடிக்கடி நிகழ்கின்றன. மேலும், கிழக்கில் புலிகளின் பெரிய பலமான மட்டக்களப்புப் பிரதேசத்தையும், யாழ்ப்பாணத்தை ஒட்டியமைந்த வன்னிப்பிரதேசத்தையும், திருகோணமலைப் பிரதேசமே இணைக்கும் பகுதியாக உள்ளது. யாழ்ப்பாணத்தில்தான் இராணுவத்துக்கும் புலிகளுக்குமிடையான பெரும் சமர் நிகழ்ந்தது. திருகோணமலை முன்பு வியாபாரம், மீன்பிடி இரண்டிலும் முன்னணியில் இருந்த ஒரு நகர் ஆகும். ஆனால் இப்போது இராணுவத்தின் பிடியும் உள்நாட்டுயுத்தமும் நகரை வெகுவாகப் பாதித்துள்ளது. முன்பு வருடமொன்றுக்கு 14,000 தொன்கள் மீன் பிடிபட்ட நகரில் மீன்பிடி 1000 தொன்களாகக் குறைந்து விட்டது.

## இராணுவமே புலிகளுக்கு ஆட்சேர்க்கின்றது

இங்குள்ளவர்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழ்ப்புலிகளை ஆதரிப்பவர்களே. இராணுவத்துக்குப் பயப்படுவதன் காரணமாக இவர்கள் இதைத்துணிந்து வெளியிடுவதில்லை. ஆனால் நாளை தேர்தல் நடக்குமானால் எல்ரிரிஈயே வெற்றி பெறும்' என்கிறார் ஓர் உள்ளூர் அமைப்புத்தலைவர். இவரைப் போன்றே, திருகோணமலையில் முக்கியம் வாய்ந்த மற்றைய தமிழர்களும் தமது பெயர் இங்கு குறிப்பிடப்படுவதை விரும்பவில்லை.

இளவயதினரை தம்மிடத்தில் சேர்ப்பதில் புலிகளுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஒரு திருமணவிழாவின்போது பாதுகாப்புப் படையினர் எட்டு இளைஞர்களைக் கொன்றனர். அடுத்த நாள் கிராமத்திலுள்ள எல்லா வாலிபர்களுமே காட்டிலுள்ள எல்ரிரிஈயுடன் போய்ச் சேர்ந்துகொண்டார்கள். பாதுகாப்புப் படையினரால் மக்கள் கொல்லப்



# நிலவின் நிறம் கறுப்பு



பொன் காந்தன்

இலங்கைத் தேசப்படம்
அதன் தலைக்குள்
ஒரு கம்பிக்கூடு
குற்றமற்றவர்கள் இங்கு
குனிந்தபடி நிற்கிறார்கள்,
நந்தியை
கொஞ்சம் கொஞ்சமாய்
சிங்கம் தின்கிறது.
செங்கோல் முறிக்கப்பட்டு
மூலைக்குள்..
எங்கும் நெஞ்சைப்பிடித்தபடி
வஞ்சமற்றவர்கள்..

அமிர்த விஷங்களை
அருந்தியதன் விளைவு இது.

ஆராய்ச்சி மணி தேடி
அலையும் கூட்டம்
'பேயாட்சி ' என
பொறுமை இழந்து உச்சரித்துவிட்டு
தங்கள் சிரங்களை
ஒரு முறை இருக்கிறதா என
சரி பார்த்துக் கொள்கிறது.
இரவுகளில்
பாதங்கள் மட்டும் தூங்கிப்
போகின்றன.
கண்கள் விழித்திருக்க
விடியும்வரை உயிர்
உடல் நுனியில்
தொங்கிக் கனக்கும்
நீளப் பகலுக்கு
மனம் ஏங்கித் தவிக்கும்
முற்றத்து நிலவு
முள்ளாய்க் குத்தும்
வீட்டுக்குள் பெருமூச்சு
மாறிமாறி மனிதரைச் சுடும்.

சிட்டுகளுக்குச் சிறை
குயிலுக்கு குரலடைப்பு
பூபாளத்தில்-
முகாரிகளின் குடியிருப்பு
மல்லிகை
சிவப்பாய் மலர்கிறது
நிலவின் முகம் கறுப்பு
அலையின் ஓசை அழுகை
ஒவ்வொரு
அந்திப் பொழுதின் சந்திப்பும்
புண்களில் வேலை ஏற்றும்.
கற்பக கருவின் கனிகூட
மண்ணின் மடியில் விழுவதற்கு
விடியும் வரை காத்திருக்கும்
'பூட்ஸ்' முளைத்த வயல்கள்
'கழுகுகள்'
தேன் அருந்திய மலர்கள்
நடக்கக்கூடிய
'காக்கி வேலிகள்'
இன்னுமின்னும் பல பல
கண்ணீர் ஊற்றுக்களுக்கு
பஞ்சமில்லாத ஒரு தேசம்
ஆனால் இங்கு
நந்தி பெற்றெடுத்தது.
நந்திகளையல்ல..
சிறுத்தைகளை,
அவை தாயில்
தணியாத அன்பு கொண்டவை.

தமிழ் ஆவணக்காப்பகம் tamileelam Archive

பட்டுள்ள மற்றைய இடங்களிலும் இதேபோன்று தான் நடந்துள்ளது. அடுத்ததடவை கொல்லப்படுவது தாங்களாய் இருக்கும் வரை அவர்கள் சும்மா காத்திருக்கவிரும்பவில்லை' என்கிறார் அமைப்புத் தலைவர்.

### பாரபட்சம்

'இங்கு வேலை வாய்ப்பு மிகக் குறைவெனினும், எமது தமிழ் இளைஞர்கள் இங்குதான் இருக்க வேண்டிய பிரச்சினைக்கு ஆளாகியுள்ளனர். அனேகமான தொழில் வாய்ப்புகள் அரச, உள்ளூராட்சித்துறைகளில்தான் உள்ளன. ஆனால் இத்துறைகளில் சிங்களவருக்குச் சாதகமாகவும். தமிழருக்குப் பாதகமாகவும் பாரபட்சம் காட்டப்படுகின்றது. தமிழருக்குத் தொழில் இல்லை. பல்கலைக்கழகங்களுக்கு மாணவரைத் தெரிவுசெய்வதுகூட இன அடிப்படையில்தான் நிகழ்கின்றது. அதிக அளவு புள்ளிகள் பெற்ற தமிழ் மாணவர்கள் தெரிவு செய்யப்படாதிருக்க, குறைந்த புள்ளிகள் பெற்ற சிங்கள மாணவர் தெரிவாவது, தமிழ் மாணவர் மத்தியில் பெரும் விரக்தியை ஏற்படுத்துகின்றது. இதுவே அவர்களைப் புரட்சிக்குத் தூண்டுகின்றது'- என்கிறார் ஒரு அரசசாரா அமைப்பைச் சேர்ந்த தலைவர். அவர் தொடர்ந்து மனக்கசப்புடன் சொல்வது என்னவெனில், 'வெளியேறு அல்லது ஆயுதத்தைக் கையிலெடு!'

'நாம் இங்கு அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்ட இரண்டாந்தரப் பிரசைகளாக ஆக்கப்பட்டுள்ளோம். எமது நிலம், கல்வி, தொழில் என்பவற்றிற்கான உரிமை, ஒரு ஒழுங்கான வாழ்க்கை வாழ்வதற்கான உரிமை இவை அனைத்துமே பறிக்கப்பட்டுள்ளன. இதற்கான தீர்வைக் காண்பது கடினமாகவுள்ளது. சிறீலங்கா சுதந்திரமடைந்துள்ள இந்த 50ஆண்டுகளில், இந்த ரணத்தில் நஞ்சேறியுள்ளது. புத்தகுருமார் அரசைத் தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கும் வரை இந்த நிலை தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனைத் தெரிந்த, உயர் பதவியிலுள்ள இன்னுமொரு தமிழர் சொல்வது என்னவெனில், -'ஒரு இளம் தமிழரால் இரண்டு காரியங்களையே செய்யமுடியும். ஒன்றில் அவர் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும். அல்லது அவர் புரட்சிவாதியாக வேண்டும். இந்த உரையாடலின்போது கிறிஸ்தவ முதுமொழியாகிய 'ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தையும் அடிவாங்க காட்டு' என்பதற்கு இணங்க இங்கு வாழ முடியாது'.

தமிழர்களை, அவர்களது சொந்த மண்ணிலேயே சிறுபான்மையாக்குவதே சிங்களவரின் நோக்கமாகும் என்றும் இவர் சொல்கின்றார். முன்னொருகாலம், திருகோணமலை 95 வீதம் தமிழர்களைக் கொண்டிருந்தது. ஆனால் அண்மைக்காலத்தில் அரசின் ஆதரவுடனும், நிதியுதவியுடனும் பெருந்தொகையான சிங்களவர் இங்கு இடம்பெயர்ந்து வந்துள்ளனர். அதே சமயம் அனேகம் முஸ்லீம் மக்கள், புலிகளின் பிரதேசத்திலிருந்து இங்கு வந்துள்ளனர். எனவே மூன்று இன மக்களும் இங்கு கிட்டத்தட்ட சமதொகையிலே உள்ளனர்.

'இங்கு சிறீலங்காவிலுள்ள சிங்கள பெரும்பான்மையினர் எம்மைக் குரங்குகளாக நடத்தலாம் என நினைக்கின்றனர். அரச இயந்திரத்தினால் எம்மை நசுக்கலாம் என நினைக்கின்றனர். உலக அபிப்பிராயத்தை அரசுக்குச் சாதகமாகத் திருப்புவதில் வெற்றியும் பெற்றுள்ளனர். ஆனால் அவர்களால் சிறுபான்மையினரது சிந்தனைப் போக்கை வன்முறை மூலம் அழித்துவிட முடியாது. எதிர் காலம் இதில்தான் தங்கியுள்ளது.'

♦♦♦♦

# சிதைவடையும் சிங்களமும் தேர்தல் வன்முறையும்

தமிழர்கள் மீதான சிங்கள இனவாத அமைப்பின் கொடூரமான வன்முறை படிப்படியாக தீவிரம் பெற்று தன் உட்கட்டுமானத்தையே சிதைக்கத் தொடங்கி யுள்ளமையை சிங்களத்தின் 'வயம்பா' (wayamba) தேர்தல் நடைமுறைகள் புலப்படுத்துகின்றன.

கொலைகள் வன்முறைகள் தலைவிரித்தாடியுள்ளன, 600ற்கு மேற்பட்ட வன்முறைகளை உத்தியோகபூர்வ பதிவுகள் பட்டியலிட்டுள்ளன. கட்சித் தொண்டர்கள் ரி—56 ரக துப்பாக்கி ஏந்தி எதிர்கட்சித் தொண்டர்களை நரவேட்டையாட முயன்றனர். சிங்களத்தின் பிரதான பொலிஸ் படையான எஸ்.ரி.எவ் (S.T.F.) இரு கட்சித் தொண்டர்களையும் மோதலில் ஈடுபடாது தடுக்கும் பணியில் அவசர அவசரமாக ஈடுபடுத்தப்பட்டன. தேர்தலைப் பார்வையிடச் சென்ற சர்வதேச பத்திரிகையாளர்கள் துப்பாக்கி சூட்டு சத்தங்களை கேட்டு தப்பி ஓடி வந்துவிட்டனர்.

> நாம் எமது விடுதலையை வென்றெடுத்து சிங்களப் பேரினவாதத்தின் பிரதான போரிற்கான காரணியை இல்லாததாக்கும் போது அடிமட்ட சிங்கள மக்கள் விழிப்புற்று இவ்வன்முறைச் சிதைவுகளின் சிக்கல்களில் இருந்து தம்மை காப்பாற்றிக் கொள்வர்

இருபிரதான இனவாத அரசியல் கட்சிகளினதும் அரசியல் அதிகாரத்திற்கான போட்டியின் உச்சநிலையானது, சிங்கள அமைப்பை சிதைத்து வரும் வன்முறையினை தமது இலாபங்களுக்காக உபயோகிக்கின்றன. சந்திரிகா அரசை பொறுத்த வரை, அடுத்து வரவுள்ள தேர்தல்களின் ஆரம்ப பரீட்சார்த்த களமாக 'வயம்பா' அமைகிறது. இங்கு ஏற்படும் வெற்றி, தோல்விகள் சந்திரிகாவின் எதிர்கால அரசியல் திட்டங்களை பாதிக்க உள்ளன.

போர்முனை தோல்விகள் - தள்ளாடும் பொருளாதாரம் - சமூகபண்பாட்டு சீரழிவுகள் என பல்வேறுபட்ட சிக்கல்களின் மத்தியில் தனது கட்சியின் அரசியல் அதிகாரத்தினை சிங்கள பேரினவாத அமைப்புக்குள் பாதுகாப்பதே சந்திரிகாவின் நோக்கம். இதே சிக்கல்களை உபயோகித்து சந்திரிகா அரசினை கவிழ்த்து அதன் மேல் தமது கட்சியை நிலைநிறுத்துவதே ரணிலின் (ஐ.தேக) உத்தியாக அமைகின்றது.

சிங்கள பேரினவாத அமைப்பின் நிலையான ஓட்டத்தில் அல்லது வீச்சில் இவ் இரு கட்சிகளினதும் தலைமை ஒரே விதமான தாக்கத்தையே கொடுக்கக்கூடியன. எதுவித ஆழமான மாற்றுப் பாதைகளையும் இவை சிங்கள பேரினவாதத்திற்கு வகுத்து வழங்கப் போவதில்லை. தமிழர்களின் விடுதலைக்கான போரை நசுக்குவதற்கான பேரினவாத திட்டமிடல்களில் இக்கட்சிகள் வெறும் மேம்போக்கான பாத்திரத்தையே வகிப்பர். இப்போரின் தீர்க்கமான சக்திகளாக திகழும் இராணுவ இயந்திரத்தை அண்டி அல்லது சார்ந்து நியாயப்படுத்தியே இவ் இரு அரசியல் கட்சிகளும் நீடிக்கும், நீடிக்கலாம்.

இவ் ஏற்றுக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வுடன் சிங்கள 'மேல்மட்ட' அமைப்பின் தலைமைக்கான போட்டியில் இவை ஈடுபடுகின்றன. போரின் கால ஓட்டம் சிங்கள சமூக அமைப்பில் சமூகபண்பாட்டு தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதையே இவ் இரு அரசியல் கட்சிகளும் உணர்கின்றன. வன்முறை சிங்கள வாழ்வின் அகத்தே பாதகமான திசையில் வேரோடி வருவதைக் கூட இவை அவதானிக்கின்றன. இயல்பான அதிகார வேட்கைக்கான சக்திகளான இவை, தமது அதிகாரப்போட்டிக்கு தாம் அவதானித்த மாற்றங்களை பயன்படுத்துகின்றன, அல்லது அதிகாரப் போட்டிக்கான விளிம்பில் சிங்கள சமூகவாழ்வில் புரையோடி செல்லும் வன்முறை தலைமைப் பாத்திரத்தை ஏற்கத் தொடங்கி விட்டது.

| பதிவு பெற்ற வன்முறை சம்பவங்கள் (கட்சி வாரியாக) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கட்சி | கொலை | கொலை முயற்சி | காயம் | தாக்குதல் | அச்சுறுத்தல் | களவு | உடமை சேதம் | மொத்தம் |
| பொ.ஐ.மு | 01 | 07 | 15 | 79 | 44 | 14 | 130 | 290 |
| ஐ.தே.க | 01 | 02 | 12 | 44 | 16 | 01 | 70 | 146 |

இச்சிதைவு படிப்படியாக கூர்மை பெறும் ஊக்குவிப்புக்களை கொண்டுள்ளன. போரை தொடரும் பேரினவாதம் இச் சிதைவின் சமூகபண்பாட்டு— பொருளாதார காரணங்களை ஆராயப்போவதில்லை. மாறாக நீடிக்கும் போரின் அகவிளைவுகளாக இச் சிதைவு தூண்டப்படும். இச்சிதைவு சார்ந்த நிறுவனமயப்படுத்தலே சாத்தியமான அடுத்த கட்ட நகர்வாக அமையலாம்.

சிங்கள இராணுவ அமைப்பின் தலைமைப்பாத்திரம் இச் சிதைவு ஊடான முரண்பாடுகள் மூலம், தேவைகள் மூலம் மேம்படுத்தப்படும். சிங்கள சமூக அமைப்பு படிப்படியாக தன் அக அமைப்பில் இராணுவ இயந்திரத்தை முழுமையாக மையப்படுத்தும் சூழ்நிலை எழுந்துவருகிறது.

இப்படிப்படியான மாற்றம் தமிழர்களின் விடுதலைப் போரை பொறுத்தவரை இரு



வேறு காலஓட்டங்களில் எதிர் எதிர்விளைவுகளைத் தரக் கூடும்.

குறுங்காலத்தில் துரிதமாக வன்முறை சமூகம் சார்ந்து தலைமைப்பொறுப்பை ஏற்கும் சிங்கள சக்திகள் போரை மூர்க்கமாக தமிழர்மீது தூண்டும்.

குவிக்கப்பட்ட ஆயுத தளபாட பயத்துடன் போரை மூர்க்கமாக்க முயலும் சந்திரிகாவும் பிறிதொரு போர்த்திடடத்தை முன்வைத்து பரப்புரை செய்யும் ரணிலும் வெறுமனே இச்சிங்கள சக்திகளின் இருவேறு 'வார்த்தைகள்.'

போரை நீடிப்பது என்ற சிங்கள பேரினவாத நலனுக்கு, இவ்வன்முறை மயப்படும் சிங்கள அமைப்பு ஏற்புடையது. தமிழர்கள் இக்காலகட்டத்தில் கடுமையான நீடித்த போரை எதிர்கொள்ள வேண்டும்.

நீண்டகால நோக்கில் உட்கட்டுமானம் சிதைக்கப்பட்ட சிங்களம் சுய அழிவின் பாதையில் நடைபோடும். வன்முறை, மேலும் வன்முறை, மேலும் கூடிய வன்முறை என அகத்தே அழியும் சிங்களம் பொருளாதார சுமையினாலும், அரசியல் பார்வை இழப்பினாலும், பண்பாட்டு சீரழிவினாலும் அடிப்படை இழப்புக்களை எதிர்கொண்டு புதியதொரு சூழ்நிலைக்கு தள்ளப்படும்.

தமிழீழ உருவாக்கம் இச் சிதைக்கப்படும் சிங்கள அமைப்பை புதியதொரு சமநிலை புள்ளி நோக்கித் தள்ளும்.


போரை நிராகரிக்கும் வன்முறை மீது களைப்புறும் பொருளாதார சுமையின் கனத்தில் விழி பிதுங்கும் அடிமட்ட சிங்கள சமூகம் இப் புதிய சமநிலைப் புள்ளியை நோக்கி சிங்களத்தின் வரலாற்றை தள்ளும்.

இதனை பிறிதொரு கோணத்தில் அணுகினால் கால ஓட்டத்தினூடு இச்சிதைவடையும் சிங்களத்தை காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் தமிழர்களிடையே வந்து சேர்கிறது.

நாம் எமது விடுதலையை வென்றெடுத்து சிங்களப் பேரினவாதத்தின் பிரதான போரிற்கான காரணியை இல்லாததாக்கும் போது அடிமட்ட சிங்கள மக்கள் விழிப்புற்று இவ்வன்முறைச்சிதைவுகளின் சிக்கல்களில் இருந்து தம்மை காப்பாற்றிக் கொள்வர். •

— நாதன் —

# (சு)தந்திரதினவிழா




**சாட்சியங்கள்**

அமெரிக்க காங்கிரஸின் மனித உரிமைகள் ஆர்வலர் குழு முன் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் (11.12.1998)

சிறீலங்காவில் நிலவும் சூழ்நிலையானது மோசமடைவதற்கும், [illegible] நிலையாகது. ஆனால் 15 வருடங்களாக இது (சிறீலங்கா) வெளியே தெரியவரவில்லை என்பதே ஒரே வித்தியாசம்.

தமிழ் இளைஞர்கள் தம்மீது பிரயோகிக்கப்படும் அரசபயங்கரவாதத்திற்கு எதிராகவே வெளிப்படுகின்றார்கள்.

அமெரிக்க காங்கிரஸ் அமெரிக்காவின் சிறீலங்கா கொள்கையை மீளாய்வு செய்ய வேண்டும்.

- எலிசபெத் போனன் (மனித உரிமைகள் வல்லுனர்)

சிறீலங்கா படைகளால் [illegible] சித்திரவதை பெருமளவு பிரயோகிக்கப்படுகின்றது. [illegible]

சித்திரவதைக்குள்ளான இரு கைதிகளை பரிசோதித்தபோது [illegible] இருவரும் பரிசோதிக்கப்பட்டிருந்தனர்.

- [illegible] (மனித உரிமைகள் வல்லுனர்)




# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்

**வீரவேங்கை வேனிதன்**
**சின்னத்தம்பி ஜீவரத்தினம்**
மட்டக்களப்பு மாவட்டம்

(12-1-1999 ஒட்டிசுட்டான் பகுதியில் சிங்கள இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடிமோதலில் வீரச்சாவைத்தழுவிக் கொண்டுள்ளார்.)

**கப்டன் சுதா**
**விரக்குட்டி ரவிந்திரகுமார்**
மட்டக்களப்பு மாவட்டம்

(12.01.1999 அதிகாலை, மட்டக்களப்பில் இராணுவத்துடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலின்போது வீரச்சாவைத்தழுவிக் கொண்டுள்ளார்.)

12.01.1999 அன்று குச்சவெளிக்கடற் பரப்பில் ஏற்பட்ட மோதலில் மூன்று போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

**மேஜர் சுகி**
**அட்லஸ் மயிலை இமானுவேல்**
யாழ்மாவட்டம்
த/மு. இரணைப்பாலை புதுக்குடியிருப்பு

**லெப். சகாதேவன்**
**தருமராசா சாந்தப்பிள்ளை**
யாழ் மாவட்டம்
த/மு. 4ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு

**2ம் லெப். சிதம்பரத்தி**
**யோகேந்திரன் சிவரஞ்சனி**
யாழ் மாவட்டம்

**2ம் லெப் ............**
**கதிர்காமத்தம்பி சுபா**
மட்டக்களப்பு மாவட்டம்

(28-04-98 இரவு 9.40 மணியளவில் திருமலை மாவட்டம் மிலாங்குளம் இராணுவ முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது விழுப்புண் அடைந்திருந்து 14.01.1999 அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.)

**வீரவேங்கை பழனிமறவன்**
**வேலுப்பிள்ளை கமலகாசன்**
வவுனியா

(11.01.1999 முத்தையன்கட்டில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விழுப்புண் அடைந்திருந்து 14.01.1999 அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.)

**வீரவேங்கை இலக்கியன்**
**தணிகாசலம் நித்தியலா**
கிளிநொச்சி

(14.01.1999 ஒட்டிசுட்டான் பகுதியில் சிங்கள இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது வீரச்சாவைத்தழுவிக் கொண்டுள்ளார்.)

15.01.1999 மாங்குளம் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

**வீரவேங்கை பார்த்தீபன்**
**பேரின்பராசா குமரன்**
அம்பாறை மாவட்டம்

**வீரவேங்கை தமிழினி**
**வேலாயுதம் தேவநாயகி**
மட்டக்களப்பு மாவட்டம்

**வீரவேங்கை கனிமுல்லை/ காவேரி**
**கோபாலகிருஸ்ணன் விஜயமலர்**
யாழ் மாவட்டம்
த/மு ஜீவன் குடியிருப்பு இலுப்பைக்கடவை
மன்னார்

(15.01.1999 அன்று மூன்று முறிப்புப் பகுதியில் இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் போது வீரச்சாவடைந்துள்ளார்)

**வீரவேங்கை கிருஸ்ணதுரை/கிருஸ்ணா**
**மகாலிங்கம் பாஸ்கரன்**
மட்டக்களப்பு மாவட்டம்

(15.01.1999 அன்று ஆரயம்பதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்திருந்து 16.01.1999 அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.)

**கப்டன் வித்யன்**
**சின்னையா சிவஜீவன்**
யாழ் மாவட்டம்
த/மு மணலாறு வவனிக்குளம் மல்லாவி

(17.01.1999 தென்மராட்சி மீசாலை பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.)

18.01.1999 அன்று தென்மராட்சிப்பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலின் போது ஐந்து போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

**மேஜர். மணிமாறன்**
**பொன்னம்பலம் சசிதரன்**
யாழ் மாவட்டம்
த/மு 297 தேவாலயவீதி பூநகரி
மன்னார்மாவட்டம்

**கப்டன். இன்பராஜா/இன்பன்**
**சரவணமுத்து ரசிகரன்**
யாழ் மாவட்டம் - த/மு விசுவமடு

**கப்டன். விதுரன்**
**சுந்தரலிங்கம் சுவேந்திரன்**
யாழ்மாவட்டம்
த/மு வின்சன் வீதி, 2ம் வாய்க்கால், திருவையாறு, கிளிநொச்சி

**கப்டன் ராஜன்**
**வள்ளுவன் நவரட்ணம்**
யாழ் மாவட்டம்
த/மு. மல்லாவி

**வீரவேங்கை தென்மறவன் தென்றல்**
**கந்தசாமி சந்திரகுமார்**
அம்பாறைமாவட்டம்

18.01.1999 அம்பகாமப் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட எதிர்ராத மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளார்.

**லெப். நிமால்/ தியாகேஸ்வரன்**
**சாமித்தம்பி திருச்செல்வன்**
அம்பாறைமாவட்டம்

(14.01.1999 அன்று வவுனியா பெரிய பூவரசம் குளப்பிரதேசத்தில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது வீரச்சாவைத்தழுவிக் கொண்டுள்ளார்.)

**வீரவேங்கை தயா**
**மாணிக்கம் சிந்தாமணி**
கிளிநொச்சி
த/மு சுரேசன் குடியிருப்பு, 8ம் கட்டை, அக்கராயன்

(21.01.1999 அன்று பரந்தன் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.)

**மேஜர் அறிவொளி / பிரகலாதன்**
**மாணிக்கம் நவசீலன்**
யாழ் மாவட்டம்
த/மு ஒட்டிசுட்டான்

(18.01.1999 அன்று வல்வெட்டித்துறை மாவடிப் பகுதியை சுற்றிவளைத்த இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது வீரச்சாவை த்தழுவிக் கொண்டுள்ளார்.)

**லெப். வைதேகி**
**சோசரி ஷமரின் / ஷாலினி**
திருமலைமாவட்டம்

22-01-99 அன்று ஒட்டிசுட்டான் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.)

**வீரவேங்கை செங்கதிர்**
**தம்பிப்பிள்ளை சந்திரன்**
மட்டக்களப்பு மாவட்டம்

(07.01.1999 அன்று திருமலை மாவட்டத்தில் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.)

•••

# உப்புத்திண்டவன் தண்ணி குடிப்பான்!

வடமேல் மாகாணசபைத் தேர்தல், படுகொலைகள், கொலைமுயற்சிகள், தீ வைப்புகள், தாக்குதல்கள், கோஷ்டிச்சண்டைகள் என இன்னோரன்ன தேர்தல்கால களோபரங்களுக்கு மத்தியில் நடைபெற்றுள்ளது. தேர்தல் என்றாலே வன்முறைகள் என்றாகிவிட்ட தேசத்தில் இவையாவும் சகஜமே என்றாலும் அதன் தீவிரம் கட்டின்றிச் சென்றிருப்பது தெரிகிறது. அதன் வன்முறை வேகம் அதிகரித்தே சென்றிருப்பது தெரிகின்றது. வடமேல் மாகாணத்தில் 1997ம் ஆண்டு நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது, நடந்த வன்முறைகளிலும், இந்த மாகாணசபைத் தேர்தலின்போதான வன்முறைகள் இரட்டிப்பாகியுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு பிரதான கட்சிகளும் தமக்கிடையே பரஸ்பரம் தலா ஒருவரைக் கொன்றிருக்கின்றன. தமக்கிடையே துப்பாக்கிச் சூடுகள் நடத்தியுள்ளன. ஆட்கடத்தல்கள் அடிபிடிகள் என தேர்தல் காலப் பிரச்சாரம் போல இந்த வன்முறைக் கலாச்சாரமும் உச்சம் பெற்றுள்ளதை காணக்கூடியதாக



இருந்தது. தேர்தல் நாளுக்கு முந்தைய நாள்வரை அறுநூறுக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் பொலிஸில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த வன்முறைகள், யாரைக் காயப்படுத்தியதோ இல்லையோ, சிங்களப் பேரினவாதிகளையும், சிங்களத் தேசியவாதிகளையும் பெரிதும் கவலைகொள்ள வைத்துள்ளன. பௌத்த சிங்களப் பேரினவாதத்தை, பேணிப்பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பைக் கொண்டுள்ள பிரதான சிங்களக் கட்சிகள் தமக்கிடையே மோதிக் கொள்வதையும், தமக்கிடையே சண்டைபிடித்துக்கொண்டு இறப்பதையும் சிங்களப் பேரினவாதிகளால் பொறுக்கமுடியவில்லை.

பௌத்த சிங்களப் பேரினவாதத்தைப் பொறுத்தவரை, ஐக்கிய தேசியக்கட்சியும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் இருகண்களாகத் தெரிகின்றன. அவை தமக்கிடையே மோதிக்கொண்டால் பேரினவாதத்தின் இதயம் தாங்குமா?

சந்திரிகா அரசிற்கு இத்தேர்தல் முக்கியமானதாகப் படுகின்றது. நான்குவருட ஆட்சிக்கு ஒரு பரீட்சைக்களமாக இத்தேர்தலை அது கருதுகின்றது. அடுத்து வரும் பொதுத்தேர்தலுக்கு முந்தைய மக்கள் வாக்கெடுப்பாகவே சந்திரிகா அரசு இதைக் கருதிக்கொள்ளுகின்றது. இதைப்போன்றே எதிர்க்கட்சிக்கும் இத்தேர்தல் முக்கியமாகப் படுகின்றது. சந்திரிகா அரசிற்கான மக்கள் ஆதரவு என்ற நிலையில் சரிவு ஏற்பட்டிருப்பதைப் படம்பிடித்து, அடுத்த பாராளுமன்ற ஆட்சியைத் தமதாக்க அது படாதபாடுபடுகின்றது.

ஆக இரண்டு பிரதான சிங்களக்கட்சிகளுக்கும் தேர்தல் முக்கியமாகப்படுகின்ற விடயம் ஆதலால், தேர்தல் வன்முறையும் முக்கியமாகப் படுவதில் ஆச்சரியம் இல்லைத்தானே.

இந்த வன்முறைக்கு இவர்கள் பழக்கப்பட்டது எப்படி? சட்டம் குறித்தான பயமின்றி பகிரங்கமாகவே துப்பாக்கிச்சூடு நடத்தவும், தீவைக்கவும், கத்திக்குத்து நடத்தவும், கோஷ்டியாகச் சென்று தாக்குதல் நடத்தவும் எங்கே கற்றுக் கொண்டார்கள்? தேர்தலை எதிர்கொள்ள இப்படி தமக்கிடையே முரட்டுத்தனமாக மோதி உயிர்விட இவர்களால் எப்படி முடிகின்றது? இவ்வாறு சிங்களத் தேசியவாதிகள் கவலை கொள்கின்றனர். முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த வன்மையின் கொடூரம் இவர்களைக் பற்றி நிற்கக் காரணம் என்ன என்ற ஆராய்ச்சியிலும், மேற்படி தேசியவாதிகள் இறங்கியுள்ளனர்.

சண்டை செய்யாமல் சனநாயகத் தேர்தலை நடத்துமாறு பௌத்த மத பீடங்கள் அரசியல்கட்சிகளுக்கு தமது தாழ்மையான வேண்டுகோளை விடுத்துள்ளன. சிங்களப்பத்திரிகைகளும் கட்சி மோதல்களை விலாவாரியாகச் சாடியுள்ளன. ஆளும்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் வால்பிடிக்கின்ற கட்சித் தலைவர்கள் கூட தேர்தல்வன்முறைகளால் உள்ளம் புழுங்கி உபதேசம் செய்யவும் தலைப்பட்டுள்ளனர்.

கொழும்பில் வர்த்தகத்துறைத் தலைவர்களால், அரசியல்வாதிகள் அனைவருக்கும் என்ற தலைப்பிட்டு, பகிரங்கமான பத்திரிகை விளம்பரம் ஒன்றும் செய்யப்பட்டுள்ளது. நாங்கள் வளர்ச்சிக்கு வழிவகுத்தால் நீங்கள் இப்பொழுது வன்முறை நடவடிக்கைகளால் அழிவுக்கு வழிவகுக்கின்றீர்களா? என வர்த்தகத்துறைத் தலைவர்கள் தமது விளம்பரத்தில் கேள்வியும் எழுப்பியுள்ளனர்.



இந்த உபதேசங்கள், இந்தச்சூழ்நிலைகள் சந்திரிகாவை சூடேற்றியிருக்கக் கூடும். சுதந்திரமான தேர்தல் பற்றி யாரும் எமக்குப் போதிக்கத் தேவையில்லை என அவர், பிரச்சார மேடையில் சீறியுள்ளார். பதினேழு ஆண்டுகளுக்கு பின்னர் தனது ஆட்சிதான் சுதந்திரமான தேர்தலை நடத்தியது என மக்கள் மத்தியில் பொரிந்து தள்ளிய சந்திரிகா, சுதந்திரமான தேர்தலை நடத்துவது எப்படி என யாரும் எமக்கு போதிக்கத் தேவையில்லை எனத் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சியினரின் வாலில் தொங்கிக்கொண்டிருக்கும் சில பத்திரிகைகள்தான் வடமேல் மாகாணத்தில் வன்முறைகள் நடைபெறுவதாக பெரிதாகப் பிரச்சாரம் செய்கின்றன என சந்திரிகா தெரிவித்திருக்கின்றார் என்றபோதும், கடந்த காலங்களைவிட தேர்தல் வன்முறை இரட்டிப்பாகியிருப்பதாக வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள்கூட சுட்டிக்காட்டுகின்றன.

**சிங்களத்தின் தேர்தல்கால அரிப்புகளுக்கு தமிழ்மக்களைச் சொறிந்துவிடும் வேலை எல்லாம் தற்போது எடுபடாது. இப்போது அவர்கள் தமக்கிடையேதான் சொறிந்து கொள்ளவேண்டியுள்ளது.**

இதை [illegible] செய்தியாளர்கள் சென்ற வாரமே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான சம்பவம் நடந்திருப்பது உண்மை நிலவரத்தை நன்கு வெளிப்படுத்தியிருக்கின்றது.

முன்பும் தேர்தல் காலங்களில் வன்முறைகள் தலைதூக்கினதான். இதைவிட மோசமாக மரணங்கள் சம்பவித்தன. தாக்குதல்கள் தீ வைப்புக்கள் நடந்தன. சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன. ஆனால் அப்போது இல்லாத தவிப்பு, சிங்களப்பெரும்பான்மையின் தலைவில் மாத்திரம் அக்கறை கொண்டுள்ள தரப்பினருக்கு இன்றுவரக்காரணம் என்ன?

அன்று கொல்லப்பட்டது தமிழர்கள். அன்று தாக்கப்பட்டது தமிழர்கள். கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்கள் தமிழருடையவை. தீவைக்கப்பட்ட வீடுகள் தமிழருடையவை. ஆனால் இன்று அவர்கள் தமக்கிடையே இ[illegible]றைப் புரிகின்றார்கள் என்பதே சிங்களப் பேரினவாதிகளின் மேலான கவலையாக உள்ளது.

முன்பு தேர்தல் காலம் வந்தாலே தமிழர்கள் அச்சம் கொண்டு வாழவேண்டிய கட்டமாக இருந்தது. தமது சிங்கள இனத்தின் மீதான பற்றுதலைக் காட்டிக்கொண்டு வாக்குப்பிச்சை கேட்க, இரண்டு பிரதான சிங்களக்கட்சிகளும் தமிழின அழிப்பையே மேற்கொண்டன. தமிழ்மக்கள் மீதான வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டன. மேடைப்பேச்சுக்களில் இனத்துவேசமே கொடிகட்டிப்பறந்தது.

இன்று நிலைமை மாறியுள்ளது. சிங்களத்தின் தேர்தல்கால அரிப்புகளுக்கு தமிழ்மக்களைச் சொறிந்துவிடும் வேலை எல்லாம் தற்போது எடுபடாது. இப்போது அவர்கள் தமக்கிடையேதான் சொறிந்து கொள்ளவேண்டியுள்ளது. அதுதான் பிரச்சினை. அதுதான் சிங்களத்தை மோசமாகப் பாதிக்கும் கவலையாகியுள்ளது.

அன்று விசவிருட்சத்திற்கு அவர்கள் போட்ட விதை, இன்று அவர்களைச் சுற்றி கிளைபரப்பியிருக்கின்றது என்பதே உண்மை. இதன் தாக்கம் இன்னும் தீவிரமடையும். தமிழினத்துக்கு எதிராக தூண்டிவிடப்பட்ட இந்த வன்முறைவெறியாட்ட கலாச்சாரம் சிங்களத்தை சுற்றியுள்ள பாம்பாக அது சதா துன்பத்தைத் தந்து கொண்டே இருக்கும்.

– சுப்பு –



# கணப்பொழுது







## கடற்கரும்புலி மேஜர் சிற்றம்பலம்

'அண்ணை என்னை நோஞ்சல் எண்டு தானே நினைக்கிறியள். உடல் நோஞ்சல் என்டாலும் உள்ளம் உறுதியாய் தான் இருக்கு' தேசத்தின் புயல்கள் படத்தில் அவன் சொல்லும் கதை இது தான்.

உண்மையில் இவன் படத்தில் நடித்தது போன்று இல்லை. படத்திற்கு நகைச்சுவை வேண்டும் என்பதற்காக இவனை வைத்து நடிப்பித்தார்கள். ஆனால் சிற்றம்பலம் இன்று காற்றில் கரைந்து போன கரும்புலியாக வெடித்து விட்டான்.

மானிப்பாய் மண் தந்த மறவன் தான் எங்கள் சிற்றம்பலம். 23. 07. 1974 ம் ஆண்டு இராசரத்தினம் தம்பதியினர்க்கு மூன்றாவது மகனாக சபேஸ்குமார் என்ற பெயருடன் இந்தப் பொன்னான பூமியில் வந்துதித்தான். இவனுக்கு ஒரு அண்ணா, ஒரு அக்கா, இரு தம்பிமார் சகோதரர்கள் ஆனார்கள். நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக குமார் வளர்ந்து வந்தான். இவனது ஒன்பதாவது வயதில் நடந்த கலவரம் இவனது மனதில் பெரிய வடுவாகியது. அப்பொழுது சிங்களப்படைகள் மீது எமது இயக்கம் நடத்திய தாக்குதல்கள் இவன் மனதில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. அந்த வயதில் தான், 'நான் பெரியவனாக மாறியவுடன் இயக்கத்திற்குப் போய் ஆமியளை அடிக்க வேணும்' என்று மனதில் நினைத்தான்.

இவன் நினைத்தது போன்றே 26. 06. 1991 அன்று புலிகளின் பாசறை நோக்கி விரைந்தவன், 'செந்தூரன்3' இல் அடிப்படைப் பயிற்சியை முடித்துக்கொண்டு ஒரு புதிய உணர்வுடன் புலி வீரனாய் காட்சி அளித்தான். கையில் துப்பாக்கி ஏந்தியவன், மாமடவைக் காவலரணிலும், வெற்றிலைக்கேணி முன்னணிக் காவலரணிலும் கடமையில் ஈடுபட்டான். இதன் பின் 15 பேரிற்கு அணித்தலைவனாய் விடப்பட்டு, 'பலவேகய2' இராணுவ நடவடிக்கைக்கு எதிர்தாக்குதலுக்காக அனுப்பப்பட்டான். இதில் வீரமுடன் போராடினான்.

இதன் பின் 7 பேர் கொண்ட அணிக்கு தலைமைதாங்கி தன் முயற்சியாலும், அந்தக்குழுவின் முயற்சியாலும் காவலரண்கள் தகர்ப்பிற்காக வேவில் ஈடுபட்டான். இதன் பின் 1992 காலப் பகுதியில் யாழ். மாவட்ட தாக்குதல் அணிக்குச்சென்றான். அங்கு சென்றதும் 'சுழல் காற்று' நடவடிக்கையில் பங்கு பற்றி, இதன் பின் சேந்தாங்குளம் நோக்கி முன்னேறிய இராணுவத்துடன் ஏழு பேர் கொண்ட அணித் தலைவனாய் நின்று களமாடினான். இந்தச் சமரில் முழங்காலில் காயமடைந்தான். காயம் மாறியதும் தன் முயற்சியால் மீண்டும் களம் [illegible] தான். பத்தமேனி, [illegible] ஆனையிறவு ஆகிய முன்னணிக் காவலரணில் நின்றான். பின் மாதகலில் பதுங்கித்தாக்குதலில் ஈடுபட்டான்.

புலிகள் தெரிவு செய்யப்பட்ட போது, இதில் ஒருவனாய் இவனும் அனுப்பப்பட்டான். கரும்புலிகளுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டது. இதில் எல்லோரும் திறமையாக செயற்பட்டார்கள். ஏனெனில் முதலில் தாக்குதலுக்கு எங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும் என்ற ஆதங்கத்திலே ஆரும். பயிற்சிகள் முடிவடைந்து தாக்குதலிற்கு கரும்புலிகள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் சிற்றம்பலமும், பல தோழர்களும் தெரிவு செய்யப்படவில்லை. அழுதார்கள். தம்மை இந்த தாக்குதலிற்கு இணைக்கவில்லை என்பது ஒரு புறம், தம்மோடு உயிருக்குயிராய் நெஞ்சிற்கு நெருக்கமானவர்கள் தம்மைவிட்டு [illegible]றார்கள் என்ற கவலை மறுபுறம், கட்டியணைத்து விடை கொடுத்து வெற்றிச் செய்திக்காக காத்திருந்தார்கள்.

வெற்றிச்செய்தியுடன் மேஜர் மாறியது யுத்த நிறுத்தம் வந்தது. பலாலியில் வீரகாவியமான கரும்புலிகள் நினைவாக, 'தேசத்தின் புயல்கள்' என்ற திரைப்படம் நடிப்பதற்காக, சக தோழர்களுடன் சிற்றம்பலமும் அனுப்பப்பட்டான். இதன் பின் 'சூரியக்கதிர்' நடவடிக்கையின் போது தாக்குதலுக்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து செல் மழையில் நனைந்தான். அங்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. மீண்டும் முகாமிற்கு வந்தான். அங்கு வந்ததும் மீண்டும் இலக்கிற்கான பயிற்சி ஆரம்பமானது. மனம் தளராதவனாய் பயிற்சி செய்தான். இப்படியே இவர்கள் பல இலக்கிற்காக பயிற்சிகள் செய்வதும், இடையில் நிரந்தரமாக இருந்தது.

இந்த வேளை ஒன்றாக கரும்புலிப்பயிற்சி பெற்று நீரடி நீச்சல் பிரிவிற்கு சென்று மேஜர் கதிரவன், மேஜர் சிவசுந்தர், மேஜர் ஜனார்த்தனன், மேஜர் ரம்போ ஆகியோர்கள் சாதனை புரிந்து சாவை அணைத்து விட்டார்கள். 'எங்களுக்கு இன்னும் இலக்கு கிடைக்கேல்லை' என தன் நண்பர்களிடம் சொல்லி கவலைப்பட்டான். அவனது கவலை நீங்கவில்லை...

'தலைவன் வழியில் தலைநகர் மீட்போம்.
கரும்புலிகள் நாம் யாரென பகைக்கு காட்டுவோம்.'
இது சிற்றம்பலத்தின் வாய் உரக்கக் கூறியது.

இவன் சூட்டுப்பயிற்சியில் சிறந்தவன். இதனால் 1993ம் ஆண்டு பூச்சியவலத்திருத்தத்திற்காக 'இம்ரான் பாண்டியன்' படையணிக்கு அனுப்பப்பட்டான். அங்கு சென்றவன், சிறிது காலத்தின் பின் தன்னை கரும்புலிகள் பிரிவில் இணைக்கும்படி தேசியத்தலைவர் அவர்கட்கு கடிதம் எழுதி அனுப்பினான். அவனது முயற்சி வீண் போகவில்லை. பதில் வந்தது. அவனையும் இணைப்பதாக பதில் வந்ததால், பொறுமையுடன் காத்திருந்தான். 1994ம் ஆண்டு முற்பகுதியில் விசேட வேவுப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டான். அங்கு அவன் திறமையுடன் பயிற்சிகள், படிப்புக்கள், செய்முறைகள் எல்லாவற்றிலும் செயல்பட்டான். இந்தவேளையில் தான், பலாலி விமானத் தளத்தாக்குதலுக்காக 22 கரும்

திலகன், மேஜர் ஜெயம், கப்டன் இரு. கப்டன் நவரட்ணம், லெப். ரங்கன் ஆகியோர் வெடியானார்கள் என்ற செய்தியும் வந்தது. விழி கசிய மலர்கள் தூவி வணக்கம் செலுத்தி இலட்சிய நெருப்பை நெஞ்சினில் மூட்டி விட்டார்கள். இதில் சிற்றம்பலமும் ஒருவனாய், மீண்டும் இலக்குக்கிடைக்கும் என்பதில் உறுதியாக இருந்தான். இவன் மட்டுமல்ல, சகதோழர்களும் தான். இந்த வேளை 'எங்களுக்கு நாங்களே இலக்குத் தேடிப்பார்த்து அடிப்பம்' என்று பொறுப்பாளருடன் கதைக்கும் போது, அவர் அதற்கிணங்க, வெற்றிலைக்கேணி முகாமிலுள்ளே வேவில் ஈடுபட்டான்.

இந்த வேளையில் தான் சமாதான ஏமாற்றுப்போர்வழி நாயகி சந்திரிகா கையில் ஆட்சி மாறியது...

...அவனது காதில் செய்தி எட்டியது. ஆம், சீனன்குடா தலைநகர் மீதில் இருந்த விமானத்தளம் மீது ஒரு இலக்குக்கிடைத்தது என்றதும், அவர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

தலைவன் தலைமாரி விட்ட, தேசத்தின் புயல்கள் விரைந்தார்கள். 'தலைவன் வழியில் தலைநகர் மீட்போம், கரும்புலிகள் நாம் யாரென பகைக்கு காட்டுவோம்.'— இது சிற்றம்பலத்தின் வாய் உரக்கக் கூறியது. எத்தனை தடவைகள் இலக்கிற்காக அலைந்தவர்கள், இலக்குக்கிடைத்தால் விடுவார்களா? கண்மணிகள் விரைவாக விரைந்தார்கள். 05.03.97 மாலை 05.15 மணியளவில் Y.12 விமானம் வந்து தரையிறங்குகின்றது. ஒரு சின்னச் சிரிப்புடன் இணைக்கு அருகே...

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

ஒன்பது மணிக்கு வெய்யில் சுள்ளென்று எரித்தது. காற்று சிறிதும் இல்லாமல் சூழலில் வெம்மை பரவியிருந்தது. காவற்துறை கட்டட வாசலில் பூரணம் கவலையான முகத்துடன் அமர்ந்திருந்தாள்.



கையின் பிடிக்குள் நாலு வயது பாரதி வாயில் விரல் போட்டுக்கொண்டு அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டு எந்தக் கவலையுமில்லாமல்......

அந்தக் குழந்தையைப் பார்க்கப் பார்க்க பூரணத்தின் மனம் பொங்கித்தவித்தது. இந்தப்பிள்ளைக்கு இன்றைக்கு என்ன வழி கிடைக்கப்போகின்றதோ.... கலங்கிய கண்களைத் துடைத்துக்கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தாள். அவளைப் போலவே கவலை சுமந்த முகங்களுடன் பலபேர்......

இவர்களுக்கும் என்னென்ன பிரச்சினைகளோ... என்னென்ன கவலைகளோ... எப்படி இருந்தாலும் தனக்கு ஏற்பட்டது போன்ற கவலைகள் வேறு யாருக்கும் ஏற்பட்டிருக்க முடியாது என்றே தோன்றுகின்றது. இந்த ஐம்பது வயதுக்குள் எத்தனை விதமான துயரங்களை அனுபவித்தாகி விட்டது. வறுமையும் ஏழ்மையும் வாழ்க்கை மீது அளவில்லாத சலிப்பை ஏற்படுத்தி விட்டது. இனித் தாங்க முடியாது என்ற எல்லைக்கு வந்தாகி விட்டது. அடிக்கிற ஷெல் வந்து தலைக்கு மேல் விழுந்து குடும்பத்தோடு எல்லோருமே செத்துப் போனால் கூட நல்லது என்று தோன்றியது.

இந்த இடப்பெயர்வின் தாக்கத்தால் எத்தனையோ துன்பம். கிளிநொச்சியில் இருந்தவரை ஏதோ வயிற்றுக்காவது சமாளிக்க முடிந்தது.

ஆனால் சுதாவின் செய்கைதான் நெஞ்சில் கத்தி செருகியது போல் ஆகிவிட்டது. எட்டுப்பிள்ளைகளில் மூத்தவள் சுதா.

கணபதி கூலி வேலைக்குப் போய் உழைத்துக் கொண்டு வருகிற வருமானத்தில் அவர் வயிறு நிரம்பும் நிலைமை.... இப்படியே வாழ்க்கை போயிருந்தால் ஏழ்மை மட்டுமே துன்பமாய் இருந்திருக்கும். ஆனால் சுதாவின் தலைவிதி அவளை என்னமாய் அலைக்கழிய வைத்துவிட்டது.

அவர்களின் வீட்டுக்குப் பக்கத்தில் பேக்கரி வைத்து நடத்திக்கொண்டிருந்தான் குணசிங்கம். அவன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவன். அவனுடன் சுதாவுக்கு எப்படிப் பழக்கம் ஏற்பட்டதோ... ஆரம்பத்தில் பூரணம் கூட கவனிக்கவில்லை. பதினெட்டு வயது சுதாவின் அறியாத்தனமா? அல்லது குணசிங்கத்தின் ஆசை வார்த்தைகளோ.... ஏதோ ஒன்றினால் சுதா ஏமாந்து போய் விட்டது தான் உண்மை. அதுதான் இத்தனை துயரத்திற்கும் காரணமாகியது.

ஒரு வருஷமாகத்தான் இங்கு பேக்கரி நடத்திக் கொண்டிருக்கிறான். அவனுடைய பின்னணி தெரியவில்லை. இவர்களுடைய பழக்கம் வளர்ந்து அயலவர்களுக்கு தெரிந்து அவமானப்பட முன்னர் முடிவு எடுக்க வேண்டிய அவசரம் ஏற்பட்டது. சுதாவைக்கல்யாணம் செய்து இங்கேயே இருக்கப் போகிறேன் என்று அவன் சொன்ன வார்த்தைகளை நம்பினார்கள். எழுத்து இல்லை, தாலி இல்லை.

ஒரு வெள்ளிக்கிழமை மாலை மாத்தி 'சோறு குடுப்பித்து' அவர்களின் கல்யாணம் வீட்டுக்குள்ளேயே நடந்தது. ஒரு வருடத்தின் பின் பாரதி பிறந்திருந்த நேரம் தான் அவனைப் பற்றிய விபரம் தெரிய வந்தது.

ஏற்கனவே அவனுக்கு மனைவியும் இரண்டு பிள்ளைகளும் கொக்குவிலில் இருந்தார்கள். குணசிங்கத்தின் மனைவியின் தமையன் கிளாலிக் கடல் கடந்து வந்தார்.

நீ இங்கிருந்து உழைத்தது காணும் வா என்று இழுத்துக் கொண்டு போனார்.

இவர்களின் அழுகையும் பரிதவிப்பும் கணக்கெடுக்கப்படாமலே போய்விட்டது. ஒரு நிமிடத்தில் குணசிங்கம் அவர்களை உதறிவிட்டுப் போனதில் சுதாவின் எதிர்காலம், எதிர்பார்ப்பு எல்லாமே சிதறிப்போய் விட்டது. எப்படி முடிந்தது அவனால் என்று ஏங்கி ஏங்கி அழுதாள். அவனது துரோகத்தை ஜீரணிக்க மனம் மிகவும் கஷ்டப்பட்டது. ஒரு வருஷத்தோடு அவளின் வாழ்க்கை முடிந்து போன துயரம் அந்த ஏழைக் குடும்பத்தை உலுப்பிவிட்டது.

ஏற்கனவே ஒரு குடும்பம் உள்ளவனிடம் எந்த நியாயத்தை எதிர்பார்க்க முடியும்? நெஞ்சில் ஆத்திரம் நெருப்பாய் எரிந்தாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

வீட்டுப் பிரச்சினையுடன் நாட்டுப் பிரச்சினையும் சேர்ந்து கொள்ள பல சுமைகளினால் அவர்கள் அழுத்தப்பட்டார்கள். சண்டைகள், இடப்பெயர்வுகள், அவர்களை இன்னும் நோகவைத்தது.

வலிகாம இடப்பெயர்வுடன் குணசிங்கம் தன் குடும்பத்துடன் உருத்திரபுரத்தில் வந்து இருப்பதாய் கேள்விப்பட்டார்கள். அவன் ஒரு தடவை கூட வந்து பார்க்கவில்லை. இவர்களும் போகவில்லை.

சுதா தெரிந்த வீடுகளில் மா இடித்து, வேறு வேலை செய்து ஏதாவது வருமானம் தேடிக்கொண்டாள். குணசிங்கம் மீதுள்ள ஆத்திரம் அவளை இன்னொரு விதமாய் நிமிரவைத்தது. எப்படியும் அவனை தேடிப் போகாமல் சமாளித்துக் கொண்டாள்.

சத்ஜெய நடவடிக்கை தான் அவர்களை மிகவும் மோசமாகப் பாதித்தது. கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு இடம் பெயர்ந்து, இந்த காட்டுப் பிரதேசத்துக்கு வந்தார்கள். இந்த ஆனைவிழுந்தான் குளத்தின் காட்டுக்கரையில் குடிசை போட்டு இருந்தார்கள்.

காடுகளில் விறகு வெட்டி சைக்கிளில் கொண்டு போய் கணபதி விற்று வந்த வருமானம் போதவில்லை. இங்கு வந்த நாளிலிருந்து மாறி மாறி எல்லோருக்கும் காய்ச்சல் தான். சுதாவுக்கு நாலு தடவை காய்ச்சல் வந்தது. மலேரியா என்றும் மூளைக் காய்ச்சல் என்றும் நெருப்புக்காய்ச்சல் என்றும் சொல்லி வைத்தியம் நடந்தது. போன பொங்கல் நேரம் மலேரியாவில் படுத்த படுக்கையாய் கிடந்தாள். இங்கு போதிய வைத்தியவசதி செய்ய முடியவில்லை. அக்கரையான் ஆஸ்பத்திரியில் பதினைந்து நாள் சுதாவை வைத்திருந்து ஏமாந்துபோக, மல்லாவி ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார்கள். மல்லாவியில் பத்து நாட்கள் ஆனைவிழுந்தான் குளத்துக்கும் மல்லாவிக்குமாய் அலைந்த அலைச்சலும் பட்ட கஷ்டமும் வாழ்க்கையில் மறக்க இயலாது. அங்கும் ஏலாமல் வவுனியாவுக்கு கொண்டு போகச் சொல்லி விட்டார்கள். அந்த நேரம் தாண்டிக்குளத்தில் சண்டை என்று போக்குவரத்து ஏதும் நடக்கவில்லை. ஒரு சனிக்கிழமை பின்நேரம் பூரணத்தின் கையணைப்பில் சுதாவின் கடைசி மூச்சு நின்றது. வாழ்க்கையில் எந்த சந்தோஷமும் காணாத சுதா.



# தீர்மானம்

இருபத்தி மூன்று வயதில் சுதாவை நெருப்புக்குக் கொடுத்துவிட்ட வயிற்றெரிச்சல் இன்னமும் தீரவில்லை. இப்போதும் அடிவயிற்றிலிருந்து அழுகை வெளிவந்தது. பூரணம் சேலைத்தலைப்பால் முகத்தை துடைத்துக் கொண்டாள். மடியில் சாய்ந்திருந்த பாரதி நிமிர்ந்து பார்த்து விட்டு 'ஏன் அம்மம்மா அழுகிறீர்கள்' என்று கேட்டாள். 'இல்லைக்குஞ்சு அம்மம்மா அழேல்லை'

பாரதி [illegible] வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள். சுதாவின் இறப்பிற்கு பின் பாரதியின் நிலைமை இன்னும் பரிதாபமாகியது.

நினைக்க நினைக்க பெற்ற வயிறு எரிந்தது. அந்த நேரம் குணசிங்கம் குடும்பத்துடன் [illegible] இருப்பதாய் அறிந்தாள். சுதா அவனைத் திரும்பியும் பார்க்க கூட ஏது என்று தான் இத்தனை நாள் இருந்தாள். இப்போது பூரணத்தால் அப்படி இருக்க முடியவில்லை. தனது மற்றப்பிள்ளைகளின் நிலை, வறுமை, பாரதியை குணசிங்கம் பொறுப்பெடுத்தால் சாப்பாட்டுக்கு கஷ்டமில்லாமல் இருப்பாள் என்ற நம்பிக்கை.

குணசிங்கம் [illegible] கடை போட்டு கொஞ்சம் வசதியாய் இருப்பதாய் தோன்றியது. தெரிந்தவர் மூலம் பாரதியை ஏற்றுக்கொள்ளும்படி அவனிடம் கேட்டு அனுப்பினாள். அவன் அதற்கு மறுத்து விட்டான். பாரதி பற்றி தனக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்று சொல்லி விட்டான். தனக்குரிய பொறுப்பை அவன் ஏற்காதது மட்டுமின்றி அலட்சியமாய் கதைத்தது தான் தாங்க முடியாத துக்கத்தைத் தந்தது.

கடைசியாய் மனம் பொறுக்க மாட்டாமல் காவல்துறையில் முறைப்பாடு கொடுத்தாள். பிள்ளையை அவன் ஏற்கட்டும் அல்லது பராமரிப்பிற்கு ஏதும் பணம் தரட்டும் என்று கேட்டிருந்தாள்.

விசாரணை செய்து இன்று தீர்ப்பு கூறுவதாய் இருந்தது. காலையில் ஆனைவிழுந்தான் குளத்திலிருந்து வருவதற்கும் பட்டபாடு ஒரு மைல் நடந்து வந்து தெருவில் போன மாட்டு வண்டியில் ஏறியிருந்து தூரம் வந்து சேர்ந்திருந்தார்கள். இந்த இடத்தில் அமர்ந்து ஒவ்வொன்றையும் நினைக்க நினைக்க மனம் ஆறமாட்டாமல் தவித்தது. மடியில் சாய்ந்திருந்த பாரதியையும் பார்க்கப் பார்க்க கண்கள் பொங்கி வழிந்தது.

இப்போது இந்த நிமிடத்தில் கூட இவளை கூட்டிக் கொண்டு போய் விடலாம் [illegible] வேண்டாத தகப்பனிடம் குழந்தையை விட மனம் வராமல் தத்தளித்தது. வேறு வழி இல்லாமல் இந்த முடிவை எடுக்க நேர்ந்தது என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

இரு பக்கத்திற்குமாக மனம் ஊசலாடியது. எது நன்மை எது தீமை என்று புரியவில்லை.

[illegible] பெண்ணாய் இருந்ததற்காக சுதா எவ்வளவு துயரத்தை அனுபவித்து விட்டாள். அவள் எந்தவித [illegible] பெறவில்லை.

தன்னையறியாமல் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே வாசலைப் பார்த்தாள்.

குணசிங்கம் சைக்கிளில் வந்து இறங்கினான். கூடவே அவனது மனைவியும். அவனைப் பார்த்த பூரணத்துக்கு பகீரென்றது.

குணசிங்கம் தனியே வந்தால், தன்னுடைய ஏழ்மையைச் சொல்லி கெஞ்சியாவது பாரதியை ஏற்றுக்கொள்ளச் செய்யலாம் என்று நினைத்திருந்தாள். மனதில் எங்கோ ஒரு மூலையில் தன் பிள்ளை என்ற பாசமாவது இருக்கும். இப்போது அவன் மனைவியைக் கண்டதும் மனதுக்குள் பயமும் சோர்வும் நிறைந்தது.

பாரதியை தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டு எழுந்தாள். பதினோரு மணிக்கு அவர்களை உள்ளே அழைத்தார்கள். பிள்ளையை குணசிங்கம் ஏற்றுக்கொள்ளச் சொல்லித் தீர்ப்புச் சொன்னார்கள். குணசிங்கம் எழுந்தான். [illegible] கொடுக்க இயலாது என்று கூறி விட்டான். அவன் சொல்லி விட்டு அந்த இடத்தை விட்டுப் போக ஆயத்தமானான்.

[illegible] முடிவு சொல்ல சிறிது அவகாசம் தருவதாக அவர்கள் சொன்னதையும் அவள் கேட்கவில்லை. பூரணத்துக்கு அழுகை கண்களில் முட்டிக் கொண்டு வந்தது. [illegible]

[illegible] இனி போக வேண்டியது தான். பூரணம் அவர்களை ஒரு தடவை வெறித்துப் பார்த்து விட்டு பாரதியின் கைகளைப் பிடித்துக் கொண்டு வெளியேறத் திரும்பினாள்.

'இன்றுமுதல் நான் இந்தப் பிள்ளையை [illegible] வைச்சிருக்கிறன்.'

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தியாறு


**தொடர்ச்சி...**

இப்படியாக ஓச்விற்சுக்கு வெளியே செல்ல முனைந்தவர்கள் ஒவ்வொருவராகத் திரும்பி வந்தார்கள். அவர்கள் சேறு நிறைந்த வளாகங்களில், மனமுடைந்த அரைப் பைத்தியங்களாக ஒன்றாய்ச் சேர்ந்து அழிவதை எதிர் நோக்கிக் காத்திருந்தார்கள். மரணத்தின் நினைவுகள் அவர்களை விட்டு ஒருபோதும் அகன்று போய் விடவில்லை. பேர்க்கினோவின் துர்நாற்றம் எப்போதும் அங்கிருந்தன.

**முதுவேனிற் காலம் 1945**

ஓச்விற்சுக்குள் வந்த மனிதன் ஒருவனைச் சந்தேகத்தோடு கூடிய உறுமல்கள் வரவேற்றன. இந்த மனிதன் தனது முன் இருபதுகளில் இருந்தான்.

இந்த மனிதன் சிறிது சதைப்




பிடிப்பானவனாகவும், பெரிய கறுத்த மீசையைக் கொண்டிருந்தவனாகவும் இருந்ததோடு, வெள்ளை வெளேரென்ற மேல் சட்டையை அணிந்து சட்டைக்கையை முழங்கைக்கு மேல் மடித்துவிட்டிருந்தான். அவன் அடியெடுத்து வைத்த அழகிய விதம் எல்லோருக்கும் அவன் ஒரு சுதந்திரமான மனிதன் எனப் பறைசாற்றின. அவர்கள் ஒரு கலந்துரையாடலுக்காக மைதானத்திற்கு அழைக்கப்பட்டார்கள். அவர்கள் அவனைச் சூழவரக் கூடினார்கள்.

"எனது பெயர் பார் ட்றோர், சிம்சன் பார் ட்றோர் (Shimshon Bar Dror) உங்களை உங்கள் சொந்த மண்ணுக்கு அழைத்துச் செல்ல பலஸ்தீனத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறேன்." அவன் சத்தமிட்டுச் சொன்னான். பலருடைய ஞாபகத்திற்கு எட்டியவரையில், முதல் தடவையாக மகிழ்ச்சி அலைகளும் ஆனந்தக் கண்ணீரும் உண்டாயின. பார் ட்றோர்ஐ இலட்சக்கணக்கான கேள்விக் கணைகள் சூழ்ந்து கொண்டன. சிலர் மகிழ்ச்சிப் பெருக்கில் மண்டியிட்டு அவன் கைகளை முத்தமிட்டனர். சிலருக்கு அவனைத் தொடுவதும் அவனைப் பார்ப்பதும் அவன் பேசுவதைக் கேட்பதும் போதுமானதாக இருந்தது. பலஸ்தீனத்தில் இருந்து வந்திருந்த சுதந்திரமான ஒரு யூதன்! சிம்சன் பார் ட்றோர் சிம்சன், சுதந்திரத்தின் புதல்வன், அவர்களைத் தாயகம் அழைத்துச் செல்ல வந்து விட்டான்.

பார் ட்றோர் அந்த வளாகத்தை அளவுக்கு மீறிய தீவிரத்தோடு பொறுப்பேற்றுக் கொண்டான். அவர்கள் செல்வதற்கு சில காலம் எடுக்கும் என்றும், மொசாட் அலியா பெற, அவர்களுக்கான ஒழுங்குகளைச் செய்யும்வரை சுயமரியாதையுள்ள மனிதர்களைப் போல் வாழ முயற்சிப்பது நல்லது என்றும் அவன் சொன்னான்.

வளாகத்தினுள் புத்துயிர் அலையொன்று புகுந்து கொண்டது. அந்த இடத்தை ஒரு ஒழுங்குக்குக் கொண்டு வரும் நோக்கில் பார் ட்றோர் குழுக்களை அமைத்தான். பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. நாடகக் குழு ஆரம்பிக்கப்பட்டது. இசைக் குழு ஒன்று உருவாக்கப்பட்டு ஒரு நடன நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது. ஒரு தினசரி செய்தி ஏடு ஒன்று அச்சிடப்பட்டது. பலஸ்தீனத்தைப் பற்றி முடிவில்லாத விவாதங்கள் நடத்தப்பட்டன. விவசாய போதனை நடாத்தும் நோக்கில் முகாம் அருகில் ஒரு மாதிரிப் பண்ணை அமைக்கப்பட்டது.

இப்படியான புதிய மனோபாவம் நிலைநிறுத்தப்பட்டு முகாம் சுயநிர்வாகத் திறனைப் பெற்றதும், சிம்சன் பார் ட்றோர் மற்றைய யூதர்களைத் தேடிப்பிடித்து இந்த ஆதார முகாமுக்குக் கொண்டுவரும் பயணங்களில் ஈடுபட்டான்.

இப்படியாகத் தங்களை வேண்டாத ஒரு தேசத்திலை விட்டு வெளியேறவோ, தங்களை வரவேற்கும் தேசத்திற்குள் செல்லவோ யூதர்கள் முடியாதவர்கள் ஆனார்கள்.

ஓச்விற்சுக்கு முன்பனிக்காலம் வந்ததோடு, மனோ நிலைமைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. பார் ட்றோர் உடைய நல்ல வேலைகள் பல பயனற்றதாயின. அவர்களை மையமாக வைத்து நிகழ்ந்து கொண்டிருக்கும் அரசியல் போரைப்பற்றி அவர்களுக்கு விளங்கப்படுத்த அந்தப் பலஸ்தீனியன் பல கூட்டங்களை நடத்தினான். ஆனால் கேட்கும் நிலையில் அவர்கள் இல்லை. அவர்கள் அரசியலைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை.

முன்பனிக்கால நடுப்பகுதியில் இன்னொரு அலியா பெற மனிதன் முகாமினுள் வந்தான். அதைத் தொடர்ந்து பார் ட்றோர் ஒரு சூதாட்டம் போன்ற முடிவை எடுத்தான். அவர்கள் இருவரும் பகுதித் தலைவர்களை அழைத்து முகாமை விட்டு வெளியே செல்ல ஆபத்தமா

சிம்சன் பார் ட்றோர்கள், மற்றைய அலியா பெற் முகவர்களும் யூதர்களைச் சேர்த்தெடுத்துப் போலந்தை விட்டு வெளிக் கொண்டு செல்ல, அயராது முயற்சி செய்து கொண்டிருந்த அதேவேளையில், இன்னொரு சக்தி அதேயளவு வேகத்தோடு அவர்களைப் போலந்துக்குள்ளேயே வைத்திருக்க முயற்சித்துக் கொண்டிருந்தது.

முழு ஐரோப்பாவிலும் பிரிட்டிஷ் தூதுவராலயங்களும் (Embassies) பிரதிநிதிக் காரியாலயங்களும் (Consulates) அந்தந்த நாட்டு அரசுகளை இப்படியான அகதிகளுக்குத் தங்கள் எல்லைகளை மூடிவிடும்படி அழுத்தங்களைப் பிரயோகித்தனர்.

பலஸ்தீனியப் பிரச்சினையில் தங்கள் சொந்தத் தீர்வைத் திணிக்க உலக சியோனிஸ்டுகளின் சதி இதுவென பிரிட்டிஷார் வாதிட்டனர்.

மொசாட் அலியா பெற்றுக்கும், பிரிட்டிஷாருக்கும் இடையில் இப்படியான மறைமுகமான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், போலந்து அரச விசுவாசிகளும் கூட ஒன்றை விடுத்தது. எல்லா யூதர்களும் போலந்திலேயே இருக்க வேண்டும் என அது பிரகடனப்படுத்தியது. ஜேர்மனியர்களின் இனவழிப்பு முயற்சிகளுக்குப் பின்பும், போலந்தில் யூதர்களை இம்சை செய்தல் தொடர்வதாகக் கருதப்படுவதை, மீதமிருக்கும் சிறு தொகை யூதர்களை வெளியேற அனுமதிப்பது நிரூபித்துவிடும் எனப் போலந்து அரசாங்கம் வாதிட்டது. ஆனால், அப்படி நடந்துகொண்டிருந்தது என்னவோ உண்மைதான்.

இருப்பதை அறிவர்.

நாங்கள் செக்கோஸ்லோவாக்கிய எல்லையை நோக்கி செல்ல முயற்சிக்கப் போகிறோம். அது நீண்ட பயணம் இல்லா விட்டாலும் கடினமானதொன்றாகும். எம்மில் மிக மெதுவாகச் செல்லும் மனிதனுடைய வேகத்திலேயே நாங்கள் செல்லக்கூடியதாகவிருக்கும். நாங்கள் பிரதான பாதைகளைத் தவிர்த்துப் பயணம் செய்ய வேண்டும் என்றான்.

பார் ட்றோர் ஒரு வரைபடத்தினைத் திறந்து வைத்து, கார்பாத்தியன் (Carpatian Mountains) மலைகளுக்கூடாகவும் ஜப்லுங்கோ கண

**- லியோன் யூரிஸ் -**

வாய் ஊடாகவும் (Jablunkov Pass) அவர்கள் செல்லப்போகும் பாதையைக் கீறிக் காட்டினான். அது 70 மைல் தூரமான பாதையாகும்.

'நாங்கள் எல்லையை அடைந்ததும் என்ன நடக்கும்?' யாரோ கேட்டார்கள்.

'எங்களுடைய அலியா பெற் ஆட்கள் போலந்து எல்லைக் காவலர்களை லஞ்சம் கொடுத்துச் சரிக்கட்டியிருக்கிறார்கள். நாங்கள் செக்கோசலவாக்கியாவிற்குள் செல்ல முடியுமானால் இப்போதைக்குப் பாதுகாப்பாயிருக்கலாம். ஜான் மசாறிக் (Jan Massaryk) எம் நண்பன். அவர் எங்களை செக்கோசலவாக்கியாவை விட்டு விரட்ட அவர் அனுமதிக்க மாட்டார்.'

அவர்கள் ஓச்விற்சை விட்டு நடு இரவில் புறப்பட்டார்கள். பிரதான



பாதைகளை விட்டும் பலவீனமானவர்களை திடமானவர்கள் தாங்கிக் கொண்டும் பரிதாபகரமான அந்தத் தப்பிப் பிழைத்தவர்களின் ஊர்வலம், பனி படர்ந்த நிலங்களூடாக, மிகுந்த சிரமமான ஆறு நாட்களுக்கு ஓய்ந்து போயிருந்த தங்கள் உடல்களை விடாப்பிடியாக விரட்டிக்கொண்டு சென்றனர். பின்பு ஊசி போல் குத்தும் கார் பாத்தியன் மலைத்தொடர்களின் குளிர்ந்த காற்றினூடாக தங்களை நடத்திச் சென்றனர். புதுமையான விதத்தில் அந்த பலஸ்தீனியர்கள் இவர்களை ஒன்றாகவும், நலத்தோடும் எல்லையை நோக்கி நடத்திச் சென்றனர்.

எல்லை நெருங்கிலும், வேறு அலியா பெற் ஊழியர்கள் துரித கதியில் போலந்து எல்லைக் காவலர்களுக்கு இலஞ்சப் பணத்தை வழங்குவதில் முனைந்திருந்தனர். பின்பு இந்தக் கந்தல் உடைகளுடனான, இந்தக் களைப்படைந்த கூட்டம் எல்லைகளை நெருங்கிய போது இவர்கள் அவர்களைக் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டார்கள். தொடர்ந்து யூதர்கள் செக்கோசலவாக்கியாவுக்குள் வெள்ளம் போல் புகுந்தனர். தொடர்ந்தும் அவர்கள் உறைய வைக்கும் குளிருக்கூடாக நடந்து ஜப்லுங்கோ கணவாய்க்கூடாகச் சென்று, மலையடிவாரத்தில், களைத்துப்போய், கால்களில் இரத்தம் வழிய, பசியோடும், வைத்திய உதவி தேவைப்பட்ட நிலையிலும் கூடினார்கள். ஒரு விசேட புகையிரதம் மொசாட் அலியா பெற்றினால் வாடகைக்குப் பெறப்பட்டிருந்தது. தப்பி வந்த இவர்கள் இந்தப் புகையிரதத்தில் ஏற்றப்பட்டனர். அங்கே அவர்களுக்கு உணவும், அன்பும், ஆதரவும் காத்துக்கொண்டிருந்தது. ஆதலால் பிரயாணத்தின் முதல் கட்டம் நிறைவேறியது.

ஒரு யூதன் சட்டபூர்வமாக பலஸ்தீனத்திற்குள் பிரவேசிக்கும் போது தனது கடவுச்சீட்டை அலியா பெற்றிடம் மீண்டும் பாவிப்பதற்காகக் கையளிக்க வேண்டும். இப்படியான 300 கடவுச்சீட்டுக்கள் ஓச்விற்சில் இருந்து தப்பிச் செல்பவர்கள் இடையே விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்தக் கடவுச்சீட்டுகளுக்கு மேலதிகமாக வெனிசுவேலா, ஈகுவடோர், பராகுவே மற்றும் தென் அமெரிக்க நாடுகளின் பிரயாண அனுமதிப் பத்திரங்களும் அலியா பெற்றினால் சேகரிக்கப்பட்டிருந்தன. இந்தப் பத்திரங்கள் சில நாடுகளுக்கும் பிரிட்டிஷாரைச் சமாளிக்கும்.

தொடரும்...

# இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

இவ்வளவு மனித உரிமை மீறல்களை தமிழ் மக்கள் அனுபவிக்கின்றார்களே! இதனை சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கையில் இதில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வைப்பதற்கு காலதாமதம் காட்டப்படுவதற்கு, சர்வதேச மட்டத்தில் என்ன காரணங்களைக் கூறுகின்றார்கள் எனத் தமிழர் மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஒருவரிடம் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கேட்டார். அப்பொழுது அத்தமிழ்ச் செயற்பாட்டாளர் கூறிய முதல் காரணம்: சிறிலங்கா நீண்டகாலமாக ஜனநாயக ஆட்சி நடந்து வரும் நாடுகளில் ஒன்று என அவர்கள் கருதுகின்றார்கள் என்பதாகும். இந்தப் பதில் உலகநாடுகளின் அறியாமையா? அல்லது சுயநலப் போக்குகளின் நியாயப்படுத்தலா? என்ற கேள்வியை புலம்பெயர் தமிழர்கள்மத்தியில் எழுப்பியது.

சிறிலங்கா என்ற ஒரு நாட்டிற்கு பிரித்தானியா சுதந்திரம் வழங்கவில்லை. இலங்கை என்ற ஒரு நாட்டிற்கே பிரித்தானியா சுதந்திரம் வழங்கியது. அப்பொழுது பிரித்தானிய அரசாங்கம் சோல்பரி அரசியல் அமைப்பின் 29 (2)வது விதியினால் தமிழர்களின் இன மத உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்து அவற்றுக்கு எதிரான சட்டங்கள் ஏதாயினும் இலங்கைப் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டால் பிரித்தானிய பிரிவிக் கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்து நீதி பெறலாம் என்ற அரசியலமைப்பு பாதுகாப்புடனேயே சுதந்திரம் வழங்கியது. இந்த பாதுகாப்பு உரிமையின் மூலமே தனியான இறைமையுள்ள தேச இனங்களாக யாழ்ப்பாண அரசிலும் வன்னிச் சிற்றரசிலும் காலனித்துவ காலத்திற்கு முன்பு வாழ்ந்த தமிழ்த் தேசிய இனம் இலங்கைத்தீவின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்த சிங்களத் தேசிய இனத்துடன் ஜனநாயக ஒற்றையாட்சியில் காலனித்துவ பிரித்தானியாவால் இணைக்கப்பட்டது. ஆனால் 1948ல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட அடுத்த ஆண்டே மலையகத் தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமையான குடியுரிமை சிங்களப் பெரும்பான்மை அரசாங்கத்தினால் பறிக்கப்பட்டது. இவ்வாண்டு இம் மனித உரிமைப் பறிப்பின் பொன்விழா ஆண்டாக உள்ளது. இக்குடியுரிமைப் பறிப்பால் இலங்கைத்தீவின் பயங்கர மலைப் பகுதிகளை வளமான நாடாக்க தங்கள் உழைப்பையும் உயிர்களையும் ஈந்து இலங்கைத்தீவில் நூறாண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வந்த பத்து இலட்சம் மலையகத் தமிழ்த் தொழிலாள வர்க்கம் நாடற்றவர்களாக வதைபடத் தொடங்கியது. இவர்களுக்கு தங்களது பெருந்தோட்டப் பொருளாதாரத்தை வளப்படுத்தவென வேலைக்கமர்த்திய பிரித்தானிய அரசாங்கம் எவ்விதமான அரசியல் உறுதிப்பாட்டையும் அளிக்காது சுதந்திரம் வழங்கி இவர்களின் அவல நிலைக்கு ஆதிகாரணமாகியது. இவர்களுக்கு டீபக்டோ –Defacto உரிமை உண்டு அது தேயூர் Dejure - நிலைக்கு உயர்த்தப்பட வேண்டுமென வாதாடி வந்த ஜவஹர்லால் நேருவும் துயரமான இந்நேரத்தில் இவர்களை கைவிட்டார். இவர்கள் பிரித்தானிய பிரிவிக் கவின்சிலில் சோல்பரி அரசியலமைப்பின் கீழ் நீதி கோரி தாக்கல் செய்த மனுவை இவர்களை அரசியல் சமூகமாக கருதமுடியாது என காரணம் கூறி பிரித்தானிய பிரிவிக் கவுன்சில் நிராகரித்தது. இதனால் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கத்தின் முதலாவது ஜனநாயகப் படுகொலை சட்ட அங்கீகாரம் பெற்று சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் தொடர்ச்சியாக ஜனநாயகத்தை கழுவேற்ற வழிகாட்டியது.

தமிழர்களின் பிரதிநிதித்துவ விகிதாசாரத்தை சரி அரைவாசியாக வீழ்த்தி இலங்கைப் பாராளுமன்றத்தின் சட்டவாக்க வலிமையை சிங்களப் பெரும்பான்மையினரிடம் சென்றடைவதற்கு இக் குடியுரிமைப் பறிப்பு காரணமாகியது. இதனை அடுத்து இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ விகிதாசாரத்தை அழிப்பதற்கான ஜனநாயக சதித்திட்டங்கள் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கத்தால் தமிழர் தாயகத்தின் நிலவள– கடல் வளப் பிரதேசங்கள் மீதான சிங்களக் குடியேற்றங்கள் மூலம் வேகப்படுத்தப்பட்டன. இவ்வாறாகத் தமிழர்களின் ஜனநாயக ரீதியான சட்டவாக்கப் பங்களிப்பை எல்லைப்படுத்திய சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் அவர்களின் தொழில் நிலைகளைப் பாதிக்க கூடிய வகையில் கைத்தொழில்–தொழிற்சாலை வளர்ச்சிகள் வடக்கு கிழக்கில் ஏற்படாமல் தடுத்தனர். தமிழர்களின் பொருளாதாரம் நிர்வாக சேவைகளூடாக எய்தப்படாதவாறு சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனை எதிர்த்து கோடீஸ்வரன் பிரித்தானிய பிரிவிக் கவுன்சிலில் தாக்கல் செய்த வழக்கு சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் சோல்பரி அரசியலமைப்பிற்கு எதிராக செயற்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியதால் நட்டாடு வழங்குமாறும் சிங்களம் மட்டும் சட்டத்தை மறுபரிசீலனை செய்யுமாறும் பிரிவிக் கவுன்சில் இலங்கை அரசைப் பணித்தது. இதனை ஏற்க மறுத்த சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் பிரித்தானிய சோல்பரி அரசியல் அமைப்பை தனது பெரும்பான்மை பலம் கொண்டு வன்முறைப்படுத்தி சட்டவிரோதமான முறையில் 1972ல் இலங்கைத்தீவில் வடக்கு கிழக்கில் இறைமையுள்ள அரசுகளுடன் விளங்கிய இலங்கைத் தமிழ் மக்களையும் நாடற்றவர்களாக்கும் பௌத்த சிங்கள குடியரசை நிறுவ வைத்தது. இந்த சிறிலங்கா என்னும் அந்நிய அரசை ஏற்க மறுத்த இலங்கைத் தமிழர்கள் சிங்களத் தமிழ்த் தேச இனங்களின் ஜனநாயக ஒற்றையாட்சி சோல்பரி அரசியல் அமைப்பை சிங்களப் பெரும்பான்மையினம் வன்முறைப்படுத்தியதால் தம்மிடம் இயல்பாகவே மீண்டு விட்ட இறைமையைப் பயன்படுத்தி தமது வரலாற்றுத் தாயகமான தமிழீழத்தை மீள் அமைத்து வாழ 1977 தேர்தலில் குடிமொப்பம் வழங்கினர். இந்தக் குடிமொப்பத்தை வழங்குவதற்கிடையில் 1972 முதல் 1977 வரையான காலப்பகுதியில் தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியாக தமிழர் பிரச்சினையை தீர்க்க எடுத்த முயற்சிகளை சிறிலங்கா அந்நிய அரசாங்கம் ஆயுத அடக்குமுறைகள் மூலம் அடக்க முயன்றது மட்டுமல்லாமல் சாதாரண தமிழ் மக்களை தனது குடிகளாக கருதாது இன அழிப்பின் மூலம் அவர்களிடை இணங்காணக் கூடிய அச்சத்தை ஏற்படுத்தி அவர்களின் அரசியல் பணிவைப் பெற முயன்றது. இதுவே தமிழ் மக்கள் தங்கள் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்க ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க வைத்தது. இந்த ஆயுதப் போராட்டத்தை சுயநிர்ணய உரிமைக்கான தேசிய விடுதலைப் போராட்டமாக வழிநடத்தி தமிழீழ மக்களதும் தமிழீழத் தேசத்தினதும் தேசிய பாதுகாப்பை வழங்கும் மக்களின் தேசிய விடுதலை இயக்கமாக தமிழீழ விடுதலைப்புலிகள் விளங்குகின்றனர்.

மலையக மக்களது குடியுரிமைப் பறிப்புடன் தொடங்கிய ஜனநாயகத்தின் படுகொலை இன்று எமது மக்களின் உயிர்களைப் பறிக்கும் இனக்கொலைகளாக வளர்ந்துள்ளமை வரலாறு. இந்நிலையில் எவ்வகையில் சிறிலங்காவை ஜனநாயகத்தையே கேலிக்கூத்தாக்கும் அரசாக சிறிலங்கா விளங்குகின்றது. 58000 மக்கள் உள்ள தொகுதியில் 9 வாக்குகளைப் பெற்ற ஒருவரை தமிழ் மக்களின் பிரதிநிதி என உலகிற்கு அத்தாட்சிக் கடிதம் வழங்கி தனக்காக ஊர்வலம் வரவைக்கும் பெருமைக்குரிய ஜனநாயகத்தை சிறிலங்காவால் தான் வெளிப்படுத்த முடியும். தமிழர் தாயகத்தின் நிறத்தையே தெரியாத ஒருவரை தமிழ் அமைச்சர் எனப்பட்டுக் குஞ்சம் கட்டி தனது வெளிவிகாரங்களைக் கொண்டு செல்லும் கெட்டிக்கார ஜனநாயக நாடகத்தை சிறிலங்காவால் தான் அரங்கேற்ற முடியும். பார்க்கும் இடமெல்லாம் பள்ளிகள் கோயில்கள் முதல் படுக்கையறை வரை துப்பாக்கிகள் உடன் மட்டுமல்ல நவீன போர்க்கருவிகளுடனும் நிறுத்தி வைத்து ஜனநாயக ஆட்சி நடத்தும் கெட்டித்தனம் சிறிலங்காவால் தான் முடியும். ஜனநாயகம் என்ற போர்வையில் ஜனநாயகத்தை எப்படி எப்படி எல்லாம் சாகடிக்கலாம் என்றால் ஆனி 29 1945ல் பிறந்த பௌத்த சிங்களப் பேரினவாத சிந்தனையாளர் சந்திரிகாவால்தான் அந்த தத்துவத்தை உலகிற்கு வெளிப்படுத்த முடியும். தமிழ் மக்களுக்கு உணவையும் மருந்தையும் வழங்காது அவர்களைக் கொன்று அழித்துக் கொண்டு அதனை ஜனநாயக ஆட்சியாக உலகிற்கு வெளிப்படுத்தும் கலை பிரான்சிய 'லூ மொந்' பத்திரிகையில் பத்திரிகையாளராகப் பயிற்சி பெற்ற சந்திரிகாவின் கைவந்த கலை. 70.000 க்கு மேற்பட்ட தமிழ் மக்களைக் கொன்று குவித்தும் இன்னும் இனக்கொலைப் பசியாறாது தினம் தினம் எம் மக்களை அவர்களது சொந்த வீட்டிலேயே எதிரிகளாக வேட்டையாடும் ஆட்சிக்கு ஜனநாயக ஆட்சி என்று ஒரு குஞ்சம் தேவையா? தமிழ்த் தாய்மாரை மட்டுமல்ல சின்னப் பிஞ்சுத் தமிழ்க் குழந்தைகளையும் அவர்கள் தமிழ்ப் பெண்கள் என்பதற்காக பாலியல் வன்முறைக்கு உட்படுத்தும் ஆட்சி எந்த வகையில் ஒரு ஜனநாயக ஆட்சியாக அமையலாம். கண்ட இடத்தில் காரணமின்றி கைது குண்டால் வதைத்து கொன்று புதைப்பு. வீடுகள் வாசல்கள் பள்ளிகள் கோயில்கள் மேல் குண்டு மழை எறிகணை வீச்சு. இவற்றுக்கு பெயர் ஜனநாயக ஆட்சி என்றால் அழுவதா? சிரிப்பதா? என்று ஒரு தவிப்பு.

இந்நேரத்தில் சிறிலங்காவின் பிரித்தானிய காலனித்துவம் ஏற்படுத்திய ஜனநாயகம் சிங்களவர்களின் சொந்தமாக்கப்பட்டு சிறிலங்கா உண்மையான ஜனநாயகத்தின் சாக்காடாக காட்சியளிக்கும் உண்மையை உலகிற்கு எடுத்துரைக்க நாமும் நீயும் ஆவன செய்தல் வேண்டும். இதை விடுத்து நம்மில் சிலரும் சிறிலங்காவில் ஜனநாயகம் இருந்தது பக்கத்தால் தான் இல்லாதது போல் தெரிகிறது நாளை வரும் எனக் கதைப்பது நம் அறியாமை மட்டுமல்ல நம் இனத்திற்கே நாம் கோடரிக் காம்பாகும் நிலையாக உள்ளது.

அன்பின் ஆசிரியர் (24.01.1999)

12ம் பக்கத் தொடர்ச்சி

## கணப்பொழுது

ஆயுள் முடிஞ்சுது' என சிற்றம்பலம் சொல்ல எல்லோரும் சிரித்தார்கள் இருள் கவ்வத்தொடங்கியது. ஆனால் விமானநிலையம் முழுவதும் பகல் போல் காட்சிதர, மின்னொளிகள் ஒளிர்ந்தன. எல்லோரும் சாகும் தேதி குறித்தவாறு. இரும்புக் குகைக்குள் கால் பதித்தனர்

தமிழன் ஆண்ட மண்ணில் மீண்டும் எங்கள் தேசத்தின் புயல்கள் பாதம், முத்தாய் பதிந்தது கூடிக்குதூகலித்துக் கூத்தாடிய படைகள், எதிர்பார்க்காத நேரம், எதிர்பார்க்காத இடம், வெடி அதிர்ந்தது கடும் சமர் மூண்டது சிற்றம்பலத்தின் உடலை சில ரவைகள் சல்லடை போட்டன மனம் தளராதவன், Y.12 விமானம் நின்ற பகுதிக்குள் தடை உடைத்து நுழைந்தவர்களில் ஒருவனாய் சிற்றம்பலமும் சென்றான. சகதோழன் Y.12 விமானத்தை நோக்கி அடிக்க முற்படும் போது, 'மச்சான் நான் அடிக்கிறன்' என்றதும் சக தோழன் சற்று விலக, சிற்றம்பலம் அடிக்க முயல, பகைவன் துப்பாக்கி அனல் கக்க, சிற்றம்பலத்தின் மேல் ரவைகள் பாய, குறி தவறிவிடுகின்றது உடனே சக தோழர்கள் இலக்கை அழித்து விட்டனர். இலக்கழித்து மிகுதிப்பேர் மீண்டனர் சிற்றம்பலம் குற்றுயிராய் துடித்துக்கொண்டிருந்தான் அருகில் சென்ற தோழன் 'சிற்றம்பலம் எங்கே காயம்' என கேட்க 'என்னால ஏலாது, நான் வெடிக்கிறன் நீங்க ஓடிப்போங்கோ' என்றான்

கடன் தீர்வதன், கடன் விதைகளுடன் சேர்ந்து சிற்றம்பலத்தையும் நாம் இழந்தோம். அந்த வெடி அதிர்ந்த கணம், ஆம், அந்தக் கணம் எவ்வளவு புனிதமானது சிற்றம்பலம் கன் தோழர், தோழியர் சுமக்கும் வெடிகள் பகைவன் மீது வெடித்துக் கொண்டே இருக்கும். நீ வெடிக்கவும் ஒரு கணம் தான் நாம் வெடிக்கவும் ஒரு கணம்தான் இந்தக்கணப்பொழுது தான் எவ்வளவு பெறுமதியானது

13ம் பக்கத் தொடர்ச்சி

[illegible]

***

# மீண்டும் துளிர்க்கும் வசந்தம்

வலிக்கும் என் விழிகளில் வழியும்
உதிரக் கண்ணீரின் உணர்வறியாதோரே.
எனது ஆன்மத்துள் ஒன்றிய
விடுதலைக் கனவின் வியாபகம் புரியாதவரே.
எனது துயரப் பாட்டொலி
கேட்காத திசைகளே!
நீண்டுபரந்த சமுத்திரப் பரப்பைத்
தாண்டி வரும் என் உணர்வுகள் தெரிந்திடுக.
கொதிப்பிடை வெந்தும்
குரலுயர்த்தும் என் கொந்தளிப்பறிக.

எனக்காய் இரங்குமாறும்
கண்ணீர் வடிக்குமாறும்
யாரையும் நான் கேட்கப் போவதில்லை.
பாவப்பட்ட உயிரென்றெனக்குப்
பிச்சையளிக்க முன்வராதீர்.
வீண் கழிவிரக்கத்தில் என்னை
புரிந்து கொள்ள முயலாதீர்.

எனது சுயத்தை அறிக.
வற்றாத வளத்துடன்
எனக்கென்றோர் வாழ்வு
இவ் வையகத்திலிருந்தது.
யாரையும் பற்றியிருக்காச் சீவியச் செழிப்பில்
வாழ்ந்த தடயங்கள் இப்போதும் உண்டு.
மானம் பெரிதென மதித்த
மாண்பு எனது மரபு.
உமைப்போல் தலை நிமிர்த்தி
மீண்டும் இங்கு நான் வாழ எழுகின்றேன்.
அதிர்வுகளுக்கு நடுவிலும் தளம்பலின்றி
எனது பயணங்கள் தடையின்றித் தொடர்கின்றன.
அக்கினிச் சருகுகளின்மேல் அயர்ந்துறங்கிலும்
இமைகள் சேர மறுத்த இரவுகளிலும்
'ஓர் இனிய வாழ்வே' கனவாய் விரிகின்றது.
தடைப்பட்டுப்போன குருதிக் குழாய்களில்
நெருப்பை நிரப்பியுள்ளேன்.
வேதனைகளிலிருந்து வெளிப்பட்டவையெல்லாம்
என்னுள் புதிய வீச்சுக்களாகின.
எல்லாம் முடிந்து விட்டது என
எண்ணியிருந்த போதுதான்
புதிதாய் மீண்டும் சுவாசிக்கத் தொடங்கினேன்.
பட்டுப்போன இடத்திலிருந்து வேர் பாய்ச்சினேன்.
புது விதையாய் முளைவிடுவேன்.
சிதைவுகளில் முகம் துளிர்ப்பேன்.
புதைக்கப்பட்ட இடத்திலிருந்து
மீண்டும் பிறப்பெடுப்பேன்.
இன்னமும் துடிப்பிழந்து போகவில்லை
என் இதயம்.



பூமிச் சுழற்சியில்
ஒரு புதிய குழந்தையாய்
பிறப்பெடுக்கப் போகும்
என்னை வரவேற்றுக் கொள்ளுங்கள்.
அஞ்சியும் கெஞ்சியும்
பணிந்தும் குனிந்தும் வாழ்வதல்ல என்விதி
எனக்குத் திணிக்கப்பட்ட வாழ்வைத் திருத்தி
புதிதாய் எழுதுகின்ற கதையைப் படியுங்கள்.
சாக்குரலின் மத்தியிலும்
எழுதப்படும் இச் சரித்திரத்தை அறியுங்கள்.

சூரியன் பூக்கும் வானத்தில்
இருள் பரவி அழுத்துகையில்
முகில்களைக் கிழித்தெறிந்து
கதிரவனை அழைத்துவர - எனது
கரங்கள் புறப்பட்டுவிட்டன.

வெறும் கற்பனையில் விரிந்ததல்ல என்கனவு.
செயல்களின் கருப்பொருளாய்
நம்பிக்கை தரும் ஒளியில்
தொடர்கின்றேன் பயணம்.
மீண்டும் துளிர்க்கும் வசந்தம்.
புதியதோர் வாழ்வு எனக்கெனப் புலரும்.

◇◇◇

—அம்புலி—